கடவுள் துணை.

காளமேகப்புலவர் சரித்திரம்.

இதில்

இப்புலவர் பெருமானுடைய

சரித்திரமும்

அவர் பாடிய பாடல்களும்

சொல்லப்படுகின்றன.

Trichinopoly.

PRINTED AT THE "RIPON" PRESS, TEPPAKULAM,

BY T. V. VENKATRAYULU NAYUDU.

1890.

மேகப்புலவர் சரித்திரம்.

[illegible]

[illegible] பிராமணர் [illegible] பரிசாரகம் செய்து [illegible] சமையல் வாசல் கோயிலில் தாசி [illegible] அதிக அழகும் ஆடலும் [illegible], இவன் அவளுடைய மோக [illegible] பெருமாள் பிரசாதமுங் [illegible] கொடுத்து அவளோடு சம [illegible] மோகமும் மாசமும் சம்பு [illegible] திருவெம்பாவைபாடும் முறைவந்த [illegible] பாடலைப் பாடுகையில் அதில் "என் [illegible] சேர்க" என்ற தொடரை அவள் [illegible] பாராமல் அவனுடனே கூ [illegible] புன்சிரிப்புச் சிரித்தது; தாசிகளுக்குள்ளே [illegible] தாசியாயிருந்தும் பெருமாள் கோயில் சுயம்பாகியுட [illegible] என்ன! "படிக்கிறது திருவாசகம் இடிக

கிறதுசிவன்கோயில்" என்பதாகவாயினும்பேசுகிறதொன்றுநடக்கிறதொன்றுயிருக்கிறதேயென்று அவனைப் பரிகாசம்பண்ணினார்கள். அது அவனுக்கு மார்பில்தைத்த முதுகில் உருவினதுபோல வருத்தத்தை விளைத்ததால், அன்றிரவு அவளைவிட்டு அவன் வரும் தருணத்தில் தெருக்கதவைச் சாத்தி உள்ளே வரவேண்டாமென்று தடுக்க, அவன் வாசலுக்கு வெளியே நின்றபடி என்ன நிமித்தத்தால் இன்றைக்கு என்னைத் தடைசெய்கிறாயென, மோகனாங்கி நீ விஷ்ணு அடியான் நான் சிவனடியாளாகையால் உன் சம்பந்தம் எனக்குத் தகாதென, அவன் "அந்தரங்கமாயனமே நினையானென்றுற்றவனே" என்றபடி உன்னைநான் ஒருபொழுதாயினும் விட்டுப் பிரிந்து சகிப்பேனோ! சகிக்கமாட்டேனாதலால் உன் தயவாகவிலேயே நான்றுகொண்டு என் பிராணனை விடுவிக்கிறேனென்றான். இவள் இந்தப் பழிவந்து சமயிக்கிறதாயிருக்கிறதேயென்று நினைத்து, நல்லது நான் வேண்டுமென்பது உனக்கு ஆவசியமாயிருந்தால் நீ சிவசமயத்தைக் கொண்டு சைவனானால் உன்னிஷ்டப்படி நடக்கிறேனென்றாளாக, அவன் காமப்பேய் கொண்டவனாகையால் "பெண்களால் வைத்தநேயம் பிழைப்போ சிரியார் பெறுவர்" என்றபடிதமாய் அவளுடைய மனதைவிடமாட்டாமல், நீ சொன்னவண்ணம் சைவசமயத்தை அனுசரிக்கிறேனென்று ஸ்ரீரங்கத்தைவிட்டுச் சம்புகேசுரத்திற்கு வந்து சிவதீட்சை பண்ணிக்கொண்டு அகிலாண்டவல்லி கோயிற் பரிசாரகனாகி, தனக்கு அவ்விடத்தில வரும்படிகளில் அவளுக்குக் கொடுத்து மீந்ததைத் தன் சீவனத்திற்கு வைத்து அனுபவித்துக்கொண்டு வந்தான்.

அக்காலத்திற் சம்புகேசுரத்தில் ஒரு சிவப்பிராமணன் தனக்கு வித்தையிற் பூரணபாண்டித்தியம் உண்டாகவேண்டுமென்று நியமத்துடனே திரிபுரைசக்கரம் ஸ்தாபித்து அதில் அத்தேவதைக்குரிய மந்திர பீஜாட்சரத்தைப்பிரணவ நமக சகிதமாய் வரைந்து உருச்செபித்து நெடுநாளாக உபாசித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் திரிகாலசாமத்தில் அகிலாண்டநாயகி அழகான ஒருசிறுபெண்போல் வடிவெடுத்து வெள்ளைவஸ்திரம் உடுத்துவாய நிறைய தாம்பூலம் தரித்துக்கொண்டு உபாசகன் கண்ணுக்கெதிரே சென்று உன்வாயைத் திறவென்று அந்தத் தாம்பூலத்தை அவன்வாயிலே உமிழப் போமளவில், அவன் நிர்ப்பாக்கியனாகையால் அவளை மகாதேவியென்றறியாமல் ஆரடி எச்சிற்றம்பலத்தை என்வாயிலே துப்பவருகிறாய் உனக்குப் பைத்தியம் பிடித்ததோ அப்புறம் எட்டநில்லடியென்று கடிந்துரைத்தான். அம்மட்டில்அவனைவிட்டுத் திரும்பிவருகையில். மோகனாங்கி அன்றிராத்திரி கோயிற்குடவரிசைக்கு வந்திருந்த தறிகது பரிசாரகனை அவளுடனே நீ வீட்டுக்குப் போம்பொழுது என்னைவந்து அழை நாமிருவரும் கூடிப

போவோமென்று அங்கொரு மண்டபத்திற் படுத்திருக்க, மோகனாங்கியுடல் விரைசயானபின்பு பரிசாரகனைத் தேடிக்காணாமல் தான் மாத்திரம் வீட்டுக்குப்போய் விட்டாள். ஸ்தானிகர் முதலானவர்களும் கோயிற்குக்கப் பூட்டிக்கொண்டு தங்கள்தங்கள் இருப்பிடத்திற்குப் போனார்கள். பரிசாரகன் விழித்துக்கொண்டு மோகனாங்கியைக்காணாமையாலும், கோயிற்கதவு பூட்டப்பட்டிருந்ததனால் தான் வெளிப்படக் கூடாமையாலும், இருந்தஸ்தானத்திலேதானே நித்திரைபிடியாமல் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அவனைமேற்சொல்லிய தேவிபார்த்து வாயைத்திறக்கச் சொல்லித் தன்வாயிலிருந்த தாம்பூலத்தை உமிழ்ந்து இதைத்தின்றுவிடென்ன, அவன் மோகனாங்கியென்று நினைத்து அவளிட்டபடி நடவாமற்போனால்அவளுக்குக் கோபமுண்டாம், பிறகு தன்முகத்தைப் பார்க்கமாட்டாளென்பதனாலும், தான் பூர்வஜன்மத்திற் செய்தபுண்ணியத்தாலும் தடுக்காமல் உட்கொண்டான். அம்மை அவனுக்கு அனந்தமுற்ற காளமேகமானது அமோகமாய் மழைபொழிவதுபோலத் தமிழில் ஆசுமுதலாகச் சொல்லப்படும் நால்வகைக்கவிகளும் விசேஷமாகச் சித்திக்கவும் அனுக்கிரகித்து மறைந்து போனார்.

அவர் போன அடியிலேதானே அவனுக்குக் கடல் மடைதிறந்தாற்போலக் கவிபாடுந்திறக்க பிரபலமானவாக்குண்டாயிற்று. அதனால் அவன் இடைவிடாது நாக்கசப் பிரசன்னமானவள் அகிலாண்ட வல்லிதானென்று உணர்ந்து அந்தமகா தேவியை ஸ்தோத்திரம்பண்ணி முதல்முதல் திருவானைக்காவுலாவென்னும் பிரபந்தம்பாடியபின்பு, அச்சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடுமுதலானபலநாடுகளுக்கும் போய்அங்கங்குள்ள பிரதானமாகிய தேவஸ்தலங்களைத் தரிசித்து அந்தந்த மூர்த்திகள்மேல் ஸ்துதியாகவும், நிந்தாஸ்துதியாகவும், மற்றும் அனேகவிதமாகவும் பலபாடல்கள்பாடி வரும்பொழுது, சுதை, கல், மரம், உலோகமுதலானவைகளை சிற்பனால் உருப்படுத்தப்பட்டபின் அவ்வற்றிற்குரிய இயற்பெயர் மாறிவெவ்வேறு சிறப்புப்பெயர் உண்டானதுபோல அகிலாண்டேச்சுரி வரப்பிரசாதத்தால முன்புள்ள பரிசாரகனென்னும் பெயர்மாறி, யாவரும் காளமேகப்புலவர் காளமேகப்புலவரென்று சொல்லும்படி மேன்மையாகிய பெயர் எத்திசையிலும் வழங்கத்தலைப்பட்டது. அக்காலத்தில் அவர் தரிசித்த ஸ்தலங்களிற் பாடியபாடல்களிற் சிலவருமாறு.

திருச்செங்காட்டில் உத்தராபதீசரைத் தரிசித்து, எப்பொழுதும் ஒழுக்கத்துடனே நாட்டின் நடுவில் வாழ்ந்திருக்கும்நாதனாரே! நீரிப்பொழுது இந்தச்செங்காட்டில்வந்து ஒளித்துக்கொண்டிருந்தால் முன்பு யமனையும்,

காறுக்கேது கோட்டு முழக்கென்ற பழமொழியும் கேட்டதில்லையோ வென்னும் கருத்தையமைத்துப்பாடியது.

> "கச்சாலம் பூண்டதில்லை காதரோ தேவரீர்
> பிச்சையெடுத் துண்ணப் பறப்பட்டோ—உச்சிதமாம்
> காளமேன் குஞ்சரமேன காக்கடலபோலே முழங்கும்
> மேளமேன் ராசாங்க மேன."

மற்றும தென்புலியூரில் வசிக்கின்ற ஐயனே? நீ இப்படி ஏழையாயி ருந்தால், ஏழையைககண்டால் ரோகமுழுமபாயும எனற பழமொழிப்படி, உன் ஆளககாரததைககணடு கொணடபெணடாட்டியானவள வலாறகார மாயத் தாணடித தலைமேலேறுளா? ஒருவன செருபபாறபுடைககாறு ஒரு வன வாயிலேவநதபடி ஏசாறு? ஒருவன்வில்முறிய மணடைமேல் பாடடா று? (தலைமேலேறினவள-கஙகை, செருப்பாறபுடைததவா-கணணபபநாய னுா, ஏசினவா-சுநதரமூாததி, வில்முறிய பாடடினவன்-அருசசுனன்) என றும கருததையமைததுப பாடியது.

> "தாண்டி யொருத்தி தலையின்மே லேறுளோ
> பூணடசெருப்பாலொருவன போடாறு—மீளா டொருவன்
> வையாறு விலமுறிய மாட்டாறு தெனபுலியூா
> ஐயாநீ யேழை யானால."

பின்னும், மேகமணடலததை அளாவிய சோலைசூழநத திருபபுலியூரில எழுநதருளியிருககின்ற அமபலவாணரே! கலலாலெறிநத சாககியநாயனு ரும, விலலால் மணடைபிளககசசாடிய விஜயனும, செருபபாற கனககப புடைதத கணணபபநாயனாரும, முதுகில் தழுமபெழுப பிரமபாலடிதத பாணடியனுமாகிய இவர்களெல்லோரும நலலவாகளென்று திருவுளமிரஙகி இவாகளுககுக் கிருபைபாலிததது, உமமை நிநதையொன்றும சொலலாமல் புஷபஙகளைககொணடு அர்சசிதத மன்மதனைக கொலைசெயததும என னநியாயததைதாற சொல்லவேணடுமென்னும் கருததை அடககிபபாடியது.

> "செலலாரும் பொழில்சூழும புலியூரம்பலவாண தேவனுரே
> கல்லாலும் விலலாலுஞ் செருபபாலும பிரமபாலுங் கடிநதுசாடும
> எலலாரு நலலவரென றிரஙகியருளீநதெனன விசுழசசி யொன
> றும், சொலலாமன் மலரைக்கொணடெறிநதவனைக் கொன்றதென்
> ன சொல்லுவீரே."

நடேசரைத் தரிசிக்கையில், திருவோடு கையிலேக்துகின்ற அம்பலவா ணரவர்கள் நிந்தைகோவிந்தனென்னும் ஆயர்தலைவனிருகக, மறறும பல

ஆயர்கள் இரவும்பகலும் மாறுமற்காத்திருக்கத் தில்லைவனத்திற் புகுந்து ஆட்டைக்களவெடுத்தது என்னவுபாயமெனவும், தில்லைக்கோவிந்தராஜப் பெருமாள் சயனத்திருக்கோலங் கொண்டிருக்கவும், மற்றும் தேவர்கள் இரவும் பகலும் அகலாதுடன் தரிசனத்திற்காகக் காத்திருக்கவும் திருச்சிற்றம்பலவாணரானவர் தில்லையம்பலத்திற் பிரவேசித்து நடனஞ்செய்தற்குத் திருவடியைத் தூக்கியது என்ன உபாயமெனவும் சிலேடையாகப் பொருளமைத்துப் பாடியது.

“கொங்குலவுந் தென்றில்லைக் கோவிந்தக் கோனிருக்கக்
கங்குல்பக லண்டர்பலர் காத்திருக்கச்—செங்கையிலே
ஓட்டெடுத்த வம்பலவ ரோங்குதில்லையுட்புகுந்தே
ஆட்டெடுத்த தென்னவுபாயம்.”

அன்றியும், தில்லைப்பதியில்வாழும் சிவபிரானே! ஊர்களிலுள்ள ஆட்டுக்குச் சாதாரணமாக நாலுகாலிருக்கின்றன. உன்னுடைய ஆட்டுக்கு மாத்திரம் இரண்டேகாலிருக்கின்றன. இரண்டுகாலிருந்தாலும், இவ்வாட்டின் மேல் வெகுகாலமாகக் கண்வைத்திருக்கின்ற அந்தப்புலியானது இந்த ஆட்டை விட்டுப்போமோ சொல். (புலி-வியாக்கிரபாதர். ஆட்டு-நடனம்) என்னும் கருத்தையமைத்துப்பாடியது.

“நாட்டுக ளாட்டுக்கு நாலுகாலையாயின்
ஆட்டுக் கிரண்டுகா லானாலும்—நாட்டமுள்ள
சீர்மேவுதில்லைச் சிவனேயிவ் வாட்டைவிட்டுப்
போமோ சொல்லாயப் புலி.”

தில்லைமூவாயிரவரிற் சிலர் நடேசர் கையிலேந்திய மானானது அவர் திருமுகத்தைப் பார்க்கத் தன்முகத்தையும், முன்னங்கால்களையும் மேலே தூக்கி நிற்பதற்குக் காரணம் கற்பித்து ஒரு வெண்பாப் பாடவேண்டுமென்ன, அவர் அன்னப்பறவைகள் வயல்களிற் சஞ்சரித்துத் தாமரை மலர்களில் தங்குகின்ற தில்லைப்பதியில் எழுந்தருளிய நடேசனது கைக்கமலத்திலிருக்கும் மானானது, அவ்விறைவனது பொன்போலும் சிவந்த நிறத்தையுடைய அழகிய ஜடாமகுடத்தில் அணிந்த அறுகம்புல்லை மேய்ந்து அங்குள்ள கங்காஜலத்தைக் குடிக்கும்படி தன்மனதில் இச்சையானது அதிகரிக்க அங்ஙனம் தாவிப்பாய்கின்றதென்னும் கருத்தையமைத்துப் பாடியது.

“பொன்னஞ் சடையறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்னெஞ்ச வாசையுறத் தாவுமே— அன்னங்கள்”

செய்க்கமலத் துற்றுலவுந் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று."

மற்றுமவர்கள் அத்தலத்திலுள்ள ஞானசபை கனகசபை, நர்த்தசபை, ஆனந்தகூபம், திருமூலட்டானம், பேரம்பலம், பஞ்சாவரணம், நாற்கோபுரம், பொற்கம்பம் மண்டபம், சிவகங்கை இவைகளை ஒருவெண்பாவாக அமைக்கவேண்டுமென்ன, புலவர் சிரோமணியானவர் நான் வேறே அமைக்கவும் வேண்டுமோ, இப்பொழுது சொன்னவைகளைச் சொன்னமுறைப்படி நீங்களே சீர்தளைவகுத்து இசைத்துப்பார்த்தால் வெண்பாவாய் முடிந்திருக்கலாமென்ன, அவர்கள் அவர்சொற்படி செய்து அவ்வாறே அமைந்திருக்கக்கண்டது.

"ஞான சபைகனகசபை நர்த்தசபை
ஆனந்தக் கூபந் திருமூலட்—டானம்பே
ரம்பலம் பஞ்சா வரணநாற் கோபுரம்பொற்
கம்பமண்ட பஞ்சிவகங் கை."

சிவகாமவல்லியைத் தரிசித்தபொழுது, மாட்டுக்கோன் தங்கையானவள் மதுரையைவிட்டுத் தில்லைவனத்திற்குவந்து ஆட்டுக்கோனொருவனுக்குப் பெண்டாகி வாழ்க்கைப்பட்டு, வெள்ளாட்டுக்கோனாகிய குட்டிகளைப் பட்டிக்குள் மறித்துக்கொண்டுவந்து விடுவதற்கு ஒரு பிள்ளையையும் பெற்றுச் சிற்றிடைச்சியாய்விட்டாள், என்செவியே, நீ இந்தச் செய்தியைக் கேள்விப்படவில்லையோ, என்கண்ணே! நீயாயினும் இதைப் பார்ப்பாயாக, (மாட்டுக்கோன்-கண்ணபிரான், ஆட்டுக்கோன்-நடேசன், குட்டிமறித்தல்-விநாயகனைவணங்கும் அடியார்கள் தத்தம் தலையிலே முன்புகோர்த்த குட்டிப்பின்பு கையைமறித்துக் குட்டிக்கொள்வது, ஒருகோட்டானை-ஒற்றைக்கொம்புள்ள யானைமுகக்கடவுள், கட்டுமணிச் சிற்றிடைச்சி-மணிமேகலைகட்டிய சிறிய மருங்குலுடையாள்) என்னும் கருத்தையமைத்துப் பாடியது.

"மாட்டுக்கோன் றங்கை மதுரைவிட்டுத் தில்லைவனத்
தாட்டுக்கோ னுக்குப்பெண் டாயினாள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானை யும்பெற்றாள்
கட்டுமணிச் சிற்றிடைச்சி காண்"

திருக்கழுக்குன்றத்தில் வேதகிரீசரைத் தரிசிக்குமளவில், பெருமை தங்கிய திருக்கழுக்குன்றத்தில் வசிக்கும் சிவனுரே! நீர் ஆந்தொட்டனே வெகுகாலமாக அவலமான அல்லற்பிழைப்பே பிழைத்துவிட்டீர்,

பகைவராகிய முப்புரத்தாரை நேரிலே கண்டவிடத்தில் வில்லைக்கையிற் பிடித்து அம்பினால் எய்து வீழ்த்தமாட்டாமல், உம்முடைய வீரம் கெடத்தாடிச சிலம்பம்போல விபரீதமாக டி பல்லை யிளித்துக்கொண்டீரே இவ்வளவுதானா, உமது படைத்திறமென்னும் பொருளை அமைத்துப்பாடியது.

"சொல்விற்பெரிய கழுக்குன்றரே தொல்லை நான்முதலா
அல்லற்பிழைப்பே பிழைத்துவிட்டீர் முப்புரத்தவரை
வில்லைப்பிடித்தெய்ய மாட்டாம னீரந்தவேளையிலே
பல்லைத்திறந்துவிட்டீ ரிதுதானும படைத்திறமே."

ஸ்ரீமுஷ்டமென்னும் திவ்வியதேசத்திற் பூவராகசுவாமியைச் சேவிக்கும்பொழுது, வயல்வாளைகள் எழும்பிவரப்பில் வளர்கின்ற கமுகமரங்களிலே மோதி, அவைகளிலுள்ள பூம்பாளைகள் தெருமுழுதும் சிதறும்படி தாவிப்பாய்கின்ற வளப்பமுடைய திருமுட்டமென்ற ஊரிற்பன்றிக்கு மார்பில் கொம்புமுளைத்திருப்பதாக ஓரதிசயத்தைக் கண்டேன், (பன்றிக்கு மார்பிலே கொம்புமுளைத்திருப்பதென்பது-ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் பூவராகமூர்த்தியாகிப் பூங்கொம்புபோன்ற பூமிப்பிராட்டியையெடுத்து மார்போடணைத்து வைத்துக்கொண்டிருப்பது) என்னுங்கருத்தையமைத்துப்பாடியது.

"தெருமுட்டப்பாளை சிதறவளர்பூகத்
தருமுட்டச் செய்வாளை தாவும—திருமுட்டத்
தூரிலேகண்டே னொருபுதுமை பன்றிக்கு
மாரிலே கொம்பான வாறு."

மற்றும திருமுட்டமென்ற திருப்பதியிலெழுந்தருளிய பூவராகமூர்த்தியே, இடதுகரத்திற பாஞ்ச சன்னியத்தை ஏந்தியபெருமாளே, உனது தாமரைபோன்ற திருவடியை நாங்கள் மர்க்கடநியாயமாக ஆசிரயிக்கத் திறமையின்றி அனுதினத்தொட்டித்துபரியந்தம் அஞ்ஞானத்தில் அமிழ்ந்துகிடக்கிறோம், ஆதலால எமக்கு வரக்கடவதாகிய கிலேசமெல்லாம் உனது நிர்ஹேதுகக்கிருபையினால் மார்ச்சால நியாயமாகவொழித்தாளும்படிக்கு நீ பெயர்ந்தே வருவாயாக வென்னும் பொருளையடக்கிப்பாடியது.

"முட்டத்துப்பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப்பன்றிக் கிடந்தோமே—தொட்ட
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெமக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா."

திருவாலங்குடியில்தட்சிணாமூர்த்தியைத் தரிசிக்கையில், வடவிருட்சத்தின் அடியில் வசிப்பவரை அமிர்தமர்த்தனம் செய்தகாலத்திற் சுராசுரர்கள்

அஞ்சியோமெம்படி பாற்கடலில் தோன்றிய ஆலாலமென்னும் விஷத்தை அவர்கள் உச்சிக்கும்பொருட்டு அமுதுசெய்தருளினவனை ஆர்தாம் விஷபானம் பண்ணமாட்டானென்று வாய்கூசாமற்சொல்லுவார், அந்தக் கொடுவிஷத்தை அவன் பானம்பண்ணாமல் நமக்கென்னவென்று உபேட்சித்திருப்பானாகில் உலகத்தாரெல்லாம் ஒருமிக்க மண்ணின்மேல் மாண்டு போகமாட்டார்களா, என்னும் கருத்தை யமைத்துப்பாடியது.

"ஆலங்குடியானை யாலால முண்டானை
ஆலங் குடியானென் றாசொல்வார்—ஆலம்
குடியானே யாயிற் குவலயத்தோ ரெல்லாம்
மடியாரோ மண்மீதி லே."

மாயூரத்திற் சுவாமி தரிசனம் செய்கையில், தம் தன்பர்கள் விரும்பினவைகளையெல்லாம் மறையாது கொடுக்கும் உதாரகுணமுடையவரென்று சொல்லப்படும் மாயூரநாதருக்கு எத்தனைகாலம் கைக்கொண்டிட்டு மாயாரி இறைத்தாலும் மாளாத இருப்பாக மலையளவான வெள்ளியும், மலையளவான பொன்னுமிருக்கவும், மேலும் தெளிந்த அறிவினையுடைய உமாதேவியானவள் எப்பொழுதும் பக்கத்திலமர்ந்து உனக்கொரு குறைவுமில்லை பயப்படவேண்டாம் பயப்படவேண்டாமென்று கையமைத்து அபயதானம் பண்ணிக்கொண்டிருக்கவும், அவர் ஏன் விஷத்தையுண்டார், நத்துமவ்வளவு பொருளிருந்தாலும் "தின்று தின்றாற் குன்றுமாளு" மென்பது பற்றியோ, அல்லது நாதுசொத்தெல்லாம் நம்மட்டிலன்றி வல்லார் கொள்ளையாய்ப் போய்விடுகிறதே யென்பதைப்பற்றியோவென்று நினைப்போமென்றால் அப்படியெல்லாமல்ல, தம்மையநோக்கி முறையிட்ட தேவர்களை ரட்சிக்கும்பொருட்டே விஷபானம் பண்ணினாரென்னும் கருத்தை அமைத்துப் பாடியது.

"வள்ள லெனும்பெரிய மாயூர நாதருக்கு
வெள்ளிமலை பொன்மலையு மேயிருக்க—தெள்ளுமையாள்
அஞ்சலஞ்ச லென்றுதின மனையிலே தானிருக்க
நஞ்சுதனை யேனருந்தி னார்."

வைத்தீசுரன்கோயிலிற் சுவாமி தரிசனம் செய்கையில் இந்தப் புள்ளிருக்கும் வேளூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, முன்னாளில் மன்மதனை எரித்த அக்கினி உன் கண்ணிலிருக்கின்றது. தாருகாவனத்து ருஷிகள் உன்னைக்கொல்லவிடுத்த அக்கினி உன் கையிலிருக்கின்றது. திரிபுரத்தைத் தகித்த அக்கினி உன் புன்சிரிப்பிலிருக்கின்றது. உனக்கு அழலாடியென வழங்கும் காரணப்பெயருக்கேற்றபடி உன் திருமேனிமுழுதும் அக்கினி சூழ்ந்திருக்கின்றது. இவ்வாறு அக்கினிமயமாயிருக்கின்ற உன்னை இந்த வைத்ய

கலையுடுத்த பெண்ணானவள் அச்சமின்றிச் சேர்ந்து எப்படித் தன் [illegible] தானும் வேறாமலிருக்கின்றான். இவனுக்கு அக்கினிக்கும்பலனிருக்கிற தென்பது தெரிந்திருக்கிறதோ, அதனால் அவ்வக்கினியை உள்ளே [illegible] மல அடக்கி வைத்திருக்கின்றானோ, எனக்குத் தெரியச்சொல்லவேண்டுமென்னும் கருத்தை அமைத்துப்பாடியது.

> "தீத்தானுன் கண்ணிலே தீத்தானுன் கையிலே
> தீத்தானுன் முன்புன் சிரிப்பிலே—தீத்தானுன்
> மெய்யெலாம் புள்ளிருக்கும் வேளூரா வுன்னையிந்தத்
> * தையலா ளெப்படிச்சேர்ந்தாள்."

திருவாரூரில்ஒரு விசேஷகாலத்திற்கோயிலுக்குப்போனபொழுது, அந்தருணத்திற் குருக்கண்மார் தியாகருக்கு வச்சிரபதக்கம் சமர்ப்பித்துச் சாத்துபடி பண்ணிக்கொண்டிருந்ததனாற் சுவாமியைத் தரிசிப்பதற்குச் சற்றுச் சாவகாசப் பட்டதுகண்டு, அவர் அன்னப்பறவைகள் வசிக்கும் வயல்கள் சூழ்ந்த திருவாரூரில் வாழும் தியாகேசருக்கு முற்காலத்தில் ஒப்பற்றசிறுத்தொண்டர் புத்திரனைக்கொன்றும், மனுநீதிகண்ட சோழனுடைய பிள்ளையைக்கொன்றும் பராக்கிரமமுடைய மன்மதனைக்கொன்றும் வைரமானது விட்டுப்போகாமல் இன்ன மிருக்குமோ, என்றமாத்திரத்தில் அந்த வச்சிரமாலை படியொன்று அறுந்து விழுந்தது. அதறிந்து அவர்கள் இவர் மகாத்மாவென்று உள்ளம்பொங்கிவந்து உபசரிக்க, இரண்டொன்றாய் அறுந்து விழுந்த அவ்வச்சிரமாலே மறுபடி ஒன்றாயப்பொருந்திப் பிரகத்துபோலாகும்படி, முன்பு இன்னம் வயிரமிருக்குமோவென்று பாடினதைப் பின்பு, இன்னம் வயிரமிருக்குமேயென்று திருப்பியமைத்துப்பாடியது.

* தையலாள்-தையல்நாயகி.

> "அன்ன வயல்சூழு மாரூர்த்தியாகனார்க்
> கின்னம்வயிர் மிருக்குமோ (மிருக்குமே)—முன்னமொரு
> தொண்டாமக னைக்கொன்றுஞ் சோழ்னாமக னைக்கொன்றும்
> சண்டமதனைக் கொன்றுந் தான்."

திருவாரூரிற் பிரமோச்சவதரிசனம் செய்கையில், செழுமையாகிய கமலைப்பதியில் வாழ்கின்ற தியாகனாரே! உமது மைத்துனரானவர் தமக்கு ஒரு மாடாயினுமில்லாதிருந்தும், காசுமல்ல; கண்கட்டு வித்தையுமல்ல; யதார்த்தமாகவே பூமிமுழுவதும் உழுது பயிர்செய்து உண்டுகளித்திருக்கின்றார். உமக்கு ஒரு வெள்ளைமாடிருந்தும் உழுது உண்ணத் [illegible] மல விஷத்தையுண்டீர். அன்றியும் நீர்பெற்ற பிள்ளை இரண்டினுக்கும், அப்பிள்ளைகளின் தாய்க்கும் ஜீவனார்த்தத்திற்கு [illegible] வழியில்லாமற் பிச்சையெடுத்தீர். உமது [illegible] இப.

பொழுது உமக்கு உச்சவக்கொண்டாட்டமும் உண்டாயிற்றே? (மைத்துனர்-திருமால், பூமிமுழுதும் உழுதது-அத்திருமால் வராகமூர்த்தியாகிய பூமியையடிவரையில் தோண்டியது, உண்டது-மகாபிரளயகாலத்தில் உலகமெல்லாம் எடுத்து விழுங்கியது, கமலைப்பதி-திருவாரூர்)" என்னும் கருத்தையமைத்துப்பாடியது.

"ஒருமாடுமில்லாமல் மைத்துனனார் புவிமுழுதுமுழுதேயுண்டார், நரைமாடொன்றுமக்கிருந்து முழுதுணணமாட்டாமல நஞ்சையுண்டீர், இருநாழிநெல்லுக்கா விரண்டுபிள்ளைக ளுநதாய்க்குமிரந்தீரின்று, திருநாளு மாயிற்றோ செங்கமலைப் பதிவாழுந்தியாகனாரே."

பின்னும், வீதியில் தியாகராஜர் எழுந்தருளி நடனஞ்செய்யக்கண்டு தரிசிக்கையில், திருமேனி முழுதும புஷ்பமணமும புழுகுமணமும் வீசுகின்ற தியாகேசருக்குக் கையிலே பணமிருந்தால அது அவ்வாச சும்மா இருக்கவொட்டுமா, "பணமென்னசெய்யும பத்துவகைசெய்யும்" என்றபடி அந்தப் பணங்கொழுப்பு மூலையிலிருந்தவரை மூர்ச்சத்திலிழுத்துவிட்டு ஆட்டிப்புடைத்தால் அவரென்னசெய்வார். நாணமின்றித் திருவாரூர் வீதியிலே பகிரங்கமாக வந்து நின்று தமமுடைய இஷ்டர்களெல்லாம பார்த்து நகைக்கத் தலைவிரிகோலமாகக் குதித்துக் கூத்தாடமாட்டாரா? (பணம-சர்ப்பகங்கணம) என்னும் கருத்தை யமைத்துப்பாடியது.

"ஆடாரோ பின்னையவ ரன்பரெலாம் பார்த்திருக்க
நீடாரூர் வீதியிலே நின்றுதாம —தோடாரும
மெய்க்கே பரிமளங்கள வீசுந் தியாகேசர
கைக்கே பணமிருந்தக் கால்."

மேலும் சுவாமியுமக்கு உண்கிறசோறுவெல்லமிய்விட்டதனால், ஊருலகுமறியப் பிச்சைச் சோற்றுக்காக எங்கெவும் ஓடி உழன்று திரிந்தீர். உமமைப்பற்றி விசாரித்துப் பார்க்குமிடத்தில், நீர் நிலையாயிருப்பதற்குச் சுவாதீனப்பட்டதாக ஒருராயினுமில்லை. இப்பொழுதிருக்கின்ற ஊரும ஒற்றியாயிருக்கின்றது. அன்றியும் உமது இயற்கையான ஊரும் பேரும் உருவமும் இப்படிப்பட்டவைகளென்று யாவராலும் அறியப்படாதவைகளாயிருக்கின்றன. அங்ஙனமாயினும், தரித்திரப்பட்டி மகன் தனபாலசெட்டியென்று பெயர் பெற்றதுபோலத் தியாகராஜரென்று பெரியபெயர் ஒன்றுமாத்திரம்பெற்று விட்டீர். இனி நீர் ஆருரிலிருப்பீர்? அங்குமிங்கும் சும்மா அலையாமல் பொருள்தானத்திற்போய் விடும். (ஒற்றி-திருவொற்றியூர், ஆரூர்-திருவாரூர்) என்னும் கருத்தையமைத்துப்பாடியது.

"பாரூரறியப் பலிக்குழன்றீர் பற்றிப் பார்க்கிலுமக்
கோரூருமில்லை யிருக்கவென் றுள்ள வூருமொற்றி
பேரூரறியா தியாகரென்றே பெரும பேருமபெற்றீர்
ஆரூரிலேயிருப் பீரினிப்போய்விடு மம்பலத்தே."

திருவண்ணாமலையில் அருணாசலேசுரரைத் தரிசிக்கையில் தறிசமைத்த சட்டியிற் பாதியுறைப்பிருக்க, அச்சட்டியிலிட்டு அள்ளிய அகப்பையிற்பாதியுறைப்பிருக்க, எதிரோட்டே இலையிற் பரிமாறினபடி. பாதியுறைப்பிருக்கப் பிராமணரோடே கொண்டுவந்து நடித்த சோணேசரானவர் அந்நாளிற் பிள்ளாய்வென்று அழைத்தபொழுது, அப்பிள்ளை கலகலவென்று சிரித்த வண்ணமாக எழுந்தோடி வந்தது என்ன அற்புதம்! என்மனமே! நீ சொல்லென்று சொந்தத்தை அமைத்துப்பாடியது.

"சட்டியிலே பாதியந்தச் சட்டுவத்திலே பாதி
இட்டவிலை யிற்பாதி யிட்டிருக்கத்—திட்டமுடன்
ஆடிவந்த சோணேச ரன்றழைத்த போதுபிள்ளை
ஓடிவந்த தென்னே யுரை."

மற்றும், உண்ணாமுலை நாயகிகோயில் ஸ்தானிகனாகிய சம்பந்தாண்டான் என்பவன் மயிர்வினைஞனிடத்தில் தன்தலையை முழுதும் முண்டிதமாகச் சௌளம் பண்ணிக்கொள்ளும் சமயத்தில் காளமேகப் புலவரைக்கண்டு மரியாதையில்லாமல் அப்பிரகாரத்தினால் இந்தஸ்தலத்தின் பெயரும், என் பெயரும், நான் செய்வித்துக்கொள்ளும் சௌளகாரியமும் ஒரு வெண்பாவில் வரும்படி, மன்னென்றெடுத்து மனுக்கென்று முடிக்கவேண்டுமென்று சொன்னான். சொன்னமாத்திரத்தில், அவர் இவன் தன்னை ஒருபொருளாக மதித்துப் பாடச்சொன்னமையால் இவனைப் பரிகாசிப்பதே தகுதியென்று நினைத்து அவன் சௌளம் பண்ணிக்கொள்வதற்கு நிமித்தமும் கற்பித்துப்பாடியது.

"மன்னு மருணகிரி வாழ்சம்பந் தாண்டார்க்குப்
பண்ணுதலைச் சௌளம் பண்ணுவதேன்—மின்னின்
இளைத்த விடைமாத ரிவனகுடுமிபற்றி
வளைத்திழுத்துக் குட்டாம லுக்கு."

ஒருகாலத்தில் ஸ்ரீரங்கத்தார்க்கும் சம்புகேசுரத்தார்க்கும் சமய விவேஷமுண்டாகி இருதிறத்தாரும் கலகப்பட்டுக்கொண்டிருக்கையில், அவர்களைச் சமாதானப்படுத்தும் பொருட்டுக் காளமேகப்புலவரை, ஸ்ரீரங்கத்தாரும் திருவானைக்காவாரும் எங்கள் மதம் உயர்ந்தது; உங்கள் மதம் தாழ்ந்தது. எங்கள்தெய்வம்பெரியது. உங்கள் தெய்வம் சிறியதென்று. [illegible],

யானைசேனைகளைக்கொண்டு ஆயுதச்சண்டை செய்வார்போல, வியர்த்தமாய் வாக்குச்சண்டை செய்வானேன். சைவம் வைஷ்ணவமாகிய இவ்விரு சமயக்கொள்கையும் "ஏகமேவாபரப்பிரமம்" என்னும் அத்வைதம்போலன்றி, ஆத்மா பரமாத்மா இரண்டுமுண்டென்றும், அவ்விரண்டும் ஒன்றாகாதென்றும் சமத்துவமுடையன வல்லவென்றும், அவ்விரண்டனுள் பரமாத்மா ஆண்டானென்றும், சீவாத்மா அதற்கு அடிமையென்றும் சொல்லப்படும் விசிஷ்டாத்வைதமாய்க் கரதலாமலகம்போல விளங்குகிறதாகையால், இதென்ன ஆச்சரியம்! இந்த விவரம் தெரியாதா? இதுபற்றி இனி ஒருவர்க்கொருவ ராரவாரங்கள் பேசவேண்டாமென்றும் கருத்தமைத்துப்பாடியது.

"ஸ்ரீரங்கத்தாருந் திருவானைக் காவாரும்
போராங்காகப் பொருவதென்—ஓரங்கள்
வேண்டாவி தென்ன விவரந் தெரியாதா
ஆண்டானுந் தாசனு மானால்."

(ஆண்டானுந் தாசனுமானா லென்பதை ஆண்டியுந் தாசனுமானாலே யென) சிலர் சொல்வர் அது சரியன்று.

மதுரையிற் சுவாமி தரிசனஞ் செய்கையில், அங்குள்ள சிவப்பிராமணர்கள் அவரைப்பார்த்துச் சோமசுந்தரக்கடவுள் சந்நிதிக்கெதிரே கட்டிய கூட்டிலிருந்து இன்னரிவாசிக்கிறதுபோலக் கூவுகின்ற கிளியைச் சுட்டிக்காட்டி, "இன்னரிவாசிக்குங்கிளி" என்பது ஈற்றடியாகவைத்து, அதற்கேற்றபடி யலங்கரித்து இந்தச் சொக்கநாதர்விஷயத்தில் ஒரு வெண்பாப் பாடவேண்டுமென்ன, புலவர் அக்காலத்தில் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தியென்னும் இம்மூவரும் பாடிய தேவாரப்பாடல்களைத் திருவுள மூவந்தருளினனென்று சொல்லும் பான்மையையுடைய பரமசிவன், நான்மாடக்கூடலில் அறுபத்துநான்கு திருவிளையாடலைச் செய்தானென்றும், தனது பரமசாமர்த்தியத்தை விளக்கிக்காட்டிய நரியாகிய பரிக்கு மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதியாகிய ஐவகை நடையினைக் கற்பித்தானென்றும், கிளியானது இன்னரிவாசிப்பானான தென்னும் கருத்தமைத்துப்பாடியது.

"ஆடல்புரிந் தானென்று மந்நாளிலேமூவர்
பாடலுவந் தானென்ற பான்மையான்—கூடலிலே
நன்னரிவாசிக்கு நடைபயிற்றி னானென்றும்
இன்னரி வாசிக்குங் கிளி."

மற்றும் பெண்களே! நீங்க ளிவ்வதிசயத்தைப் பார்த்தீர்களா, இந்த மதுரையிலெழுந்தருளிய கடம்பவனநாதரானவர் எப்போதும் பெண்ணைத்

தலைமேலேசுமந்து திரிகின்ற பைத்தியம்பிடித்தவர். அன்றியும் எட்டுத்திக்குக்கும் சிலாக்கியமாயிருக்கின்ற தங்கைமேலே நெருப்பைவாரியிட்டார். அக்காளை நிறுத்தி அவள்மேலேறினார். ஆதலால் பித்தர்க்குத் தங்குணம் நாலினும் செம்மையென்பது மெய்ப்பாட்டிருக்கின்றது. (பெண்ணைச்சுமந்தது-கங்கையைத்தாங்கினது, தங்கைமேல் நெருப்பிட்டது-தமது கையில் மழுவேந்தினது, அக்காளையேறியது-அந்த இடபத்தின்மேலேறினது) என்னும் கருத்தமைத்துப்பாடியது.

"கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்
பெண்டா தலைச்சுமந்த பித்தனார்—எண்டிசைக்கும்
மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பையிட்டார்
அக்காளை யேறினா ராம்."

அங்கயற்கண்ணம்மையைத் தரிசிக்கும்பொழுது இந்த உலகத்தில் நான் நல்ல புதுமையொன்று கண்டேன். அதைச் சொல்லவா சொல்லவா சொல்லவா, சொன்னால் பெண்பாவமாகிறதே, ஆணுக்குக் கெடுசெய்தாலும் பெண்ணுக்குப் பிழைசொல்லலாகாதே, ஆதலால் அடக்கவேண்டுமல்லவா எப்படிச் சொல்லுகிறதென்றால் "மலிந்தால் கடைக்கு வரு" மென்பதனாலும், 'உள்ளது குறையாது இல்லாது பிறவாது" என்பதனாலும், அடக்குவதனால் பயனில்லை சொல்லத்தான் வேண்டும். அதென்னவெனில் செல்வம் நிறைந்த மதுரைப்பதியிலுள்ள மீனாட்சியென்பவள் அரசர்க்கரசப்போனானும் ஆயிரங்கொடுத்தாலும் வாராதெண்டையுடைய பெண்ணுமாய் பேதைமைக்குணத்தால் பாண்டியனிடத்திற் குதிரைவிற்க வந்தவனைச்சேர்ந்து விக்கினேசுரனென்ற யானைக்கன்றைப்பெற்றாளென்பதுதான். (குதிரைவிற்க வந்தவன்-சொக்கநாதன்) என்னும் கருத்தமைத்துப்பாடியது.

"நல்ல தொருபுதுமை நானிலத்தில் நான்கண்டேன்
சொல்லவா சொல்லவா சொல்லவா—செல்வ
மதுரைவிக்கி னேசுரனை மாதுமையாள் பெற்றாள்
குதிரைவிற்க வந்தவனைக் கொண்டு."

ஒருகாலத்தில் தமக்கு வியாதிகண்டு அது மணிமந்திர ஒளஷதங்களால் நிவர்த்தியாகாமையால் வைத்தீசுரன்கோயில் மண்ணை எடுத்து இது வினைதீர்த்தான் மருந்தென்று உட்கொண்டவுடனே, பரிகாரமாகுமென்பதை உணர்ந்து அத்தலத்திற்குவந்து அவ்வாறுசெய்து தொழுதெழுந்தபொழுது காளமேகப்புலவர், தொண்டர்களுக்குப் பரிந்திட்டு அவர்களுடன் தாமுமொருவராயிருந்து விருந்துண்டருளிய, புள்ளிருக்கும் வேளூரில் வசிக்கும் எமது நாதரானவர் உலகத்திற் பிரபல வைத்தியராக வேற்பட்டிருந்து, எவர்களுக்கும் கண்ட வியாதிகளையெல்லாம் சான்றோரும் தப்பா

மல் தீர்த்து வருகின்றார். பார்த்தீர்களா! அதற்காக அவர்கொடுக்கும்மருந்தை ஆராய்ந்துபார்த்தால் அதென்ன கட்டுச்சரக்கா, காட்டுச்சரக்கா, கடைச்சரக்கா, அது வொன்றுமல்ல, சுத்தமண்தான். ஆனாலும் அவருக்குக் கைவாசியுண்டுபோலக் காணுகிறது (தொண்டர்களுக்குப் பகுத்துண்டலாவது, ஐயாறதனிற் சைவனாகியுமென்றபடி, திருவையாற்றில் மகோற்சவத்தின் ஐந்தாம்நாள் சுவாமி தமது சந்நிதியில் நிவேதிக்கப்பெறும் திருப்பாவாடையமுதை மற்றச் சைவர்களுடன் தாமுமொரு சைவனாயிருந்து பகுத்துண்பது) என்னும் கருத்தையமைத்துப்பாடியது.

"மண்டலத்தி னுள்ளும் வயித்தியராய்த் தாமிருந்து
கண்டவினை தீர்க்கின்றார் கண்டீரோ—தொண்டர்
விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரெந் நாதர்
மருந்தைப் பார்த்தாற் சுத்தமண்."

திருநாகையென்னும் ஸ்தலத்திற் சிவதரிசனஞ் செய்யப்போனவிடத்தில், திடமான சங்கீதப்பயிற்சியுஞ் சாரீரமுமில்லாத ஒரு தேவடியாள் தம்பூருமீட்டிக் குரலெடுத்துப்பாடக் கேட்டபொழுது, அது காணகர்த்தமாய் சகிக்கக்கூடாமலிருந்ததை நிமித்தம் தமக்கு வெறுப்புண்டாகி, யாவரும் வாழ்த்தாநின்ற நாகைப்பதியிலிருக்கும் அழகுள்ள தேவடியாளொருத்தி பாழ்ங்குரலெடுத்துப் பாடினாள். பாடக்கேட்டவுடனே நேற்றுக் கழுதையைக் காணாமல் ஊரெங்கும் தேடியலைந்து கொண்டிருந்த வண்ணானொருவன் என் கழுதையைக் கண்டேன் கண்டேனென்று சந்தோஷத்தோடே கட்டியிழுத்துப் போம்படி வைக்கோற்பழுதையைக் கையிலெடுத்துக் கொண்டு சீக்கிரமாக ஓடிவந்தான் பார். (நாகை-நாகபட்டணம்) என்னும் கருத்தையமைத்துப்பாடியது.

"வாழ்த்து திருநாகை வாகான தேவடியாள்
பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள்—நேற்றுக்
கழுதைகெட்ட வண்ணானுங் கண்டேன் கண்டேனென்று
பழுதையெடுத் தோடிவந்தான் பார்."

திருவிடைமருதூரென்ற ஸ்தலத்திற் சிவதரிசனஞ் செய்யுமளவில் குளிர்ச்சிதங்கிய தேன்பொருந்திய சோலைசூழ்ந்த மருதூரிலெழுந்தருளியிருப்பவரே! அந்தகாலத்தில் கண்ணப்பநாயனார் தமது வாயில் வைத்துத்தின்று சுவைபார்த்தூட்டிய மானிறைச்சி முதலிய கறியும், சிறுத்தொண்டநாயனார் அன்பினால் பாகமாகச் சமைத்திட்ட பிள்ளைக்கறியும் உமக்குப்போதாதோ? உமது வயிறென்ன சாணோ சமுத்திரமோ? நீர் பன்றிக்குட்டியையும் ஏதுக்கு நெருப்பிலிட்டுத் தீத்தீர் சொல்லுவீராக. (பன்றிக்குட்டியைத் தீத்தது-வராகவுருவெடுத்த திருமாலின் மகனாகிய மன்மதனை நெற்றிக்கண்ணினால் எரித்தது) என்னுங்கருத்தை யமைத்துப்பாடியது.

"கன்னனிரெங் கறியுங் காட்டுமெருத் தொண்டீரன்று
பன்னனிசிறு வன்கறியும் பற்றுதோ—தன்னனிய
மட்டிடையயுஞ் சோலை மருதீசரோ பன்றிக்
குட்டியையேன் றீத்தீர குறித்து."

திருத்துருத்தியென்னும ஸ்தலத்திற் சுவாமியைத் தரிசிக்கையில் அவ்விடத்திலுள்ள குருக்கள்மார் எங்கள் பரமசிவனுடைய ஆபரணத்தை விசேஷித்து ஒருவெண்பாப பாடவேணடுமென்ன, இவர் மலர்க்காவி விடங்களிலும வயலிடங்களிலும முந்துகளார்ந்த திருத்துருத்தி யென்கின்ற பெரியநகரத்தில் வசிக்கும் பொய்மையில்லாத சத்தியஸ்வரூபராகிய சிவபிரானனவா, தமது திருமேனியில் அணியும பூஷணமோ பிரசண்டமாருததையும பட்சணம்பணனும. பாறகடலைக கடையக் கயிறுமாகும். திருமாலுணட பூமியையும் தன் தலையிலேந்தி வாழாநிற்குமென்னும் கருத்தையமைத்துப்பாடியது.

"காலையிலும் வேலை கடையக் கயிறாகும்
மாலையிலும பூமுடித்து வாழுமே—சோலையில்
செய்யிலா ரமபையிலுஞ் செந்துருதது மாநகர்வாழ்
பொய்யிலா மெய்யரிடும் பூண்."

மறறும் புங்கங்கொம்பங்கிளகொன்பது-புளியங்கொம் பங்கிங்கொன்பது-வெட்டிநறுககிய வெள்வேலங்கொம் பங்கிங்கொன்பது என்னும் இவைகளை ஒருவெண்பாவில் அடககிப்பாடவேணடுமென்ன, இவர், "எங்கள் மடத்துக கெரிகரும்புகொள்வது" என்பதை முதலில் எழுவாயாகச் சேர்த்து நீங்கள் சொன்னவாறே சொல்லிப்பாருஙகள் வெண்பாவாய் முடிந்திருக்கின்றதென்ன, அவர்கள் அந்தப்படி சொல்லிக்கண்டது.

"எங்கண் மடத்துக் கெரிகரும்பு கொள்வதுபுங்
கங்கொம்பங் கிங்கொன் பதுபுளி—யங்கொம்பங்
கிங்கொன் பதுவெட்டிநறுக் கியவெள்வே
லங்கொம்பங் கிங்கொன்பது."

சதுர்த்தி புண்ணியகாலத்தில் விக்கினேசுரர் மூஷிகவாகனத்[illegible] வீதியிலெழுந்தருளிவரக்கண்டு தரிசிக்கையில், கர்ணமுதலிய [illegible] கலையுடைய வலிமைமிகுந்தபெரிய மலைபோலும் யானை [illegible] வாகிய ஒரு எலியானது இழுத்துக்கொண்டு போ[illegible] குறித்துக் கேள்விமுறையில்லையோ! இவருடைய [illegible]

சக்கரமும் பிரமனது தண்டமும் எங்கேபோயின. அவைகளை ஆர் பறித்துக்கொண்டு போனார்களென்னும் கருத்தையமைத்துப்பாடியது.

"மூப்பான் மழுவு முராரிதிருச் சக்கரமும்
பார்ப்பான் கதையும் பறித்தோ ராரோ—வாய்ப்பார்
வலியிருந்த மும்மதத்து வாரணத்தை யையோ
எலியிழுத்துப் போகின்றதே."

ஷஷ்டியிற் சுப்பிரமணியரானவர் தமது வலப்பக்கத்திற் சிவபெருமானும், அவர் பக்கத்தில் உமாதேவியும், இடதுபக்கத்தில் திருமாலும் அவர் பக்கத்தில் விநாயகமூர்த்தியும் வரிசையாய் வரும்படி, மகாசம்பிரமத்துடனே வீதியில் எழுந்தருளக்கண்டு தரிசித்தபொழுது, தகப்பன் இரந்துண்டு சீவிப்பவன், தனைப்பெற்றதாய் மலைநீலி, தாயுடன் பிறந்த மாமன் உறி வெட்டி வெண்ணெய்த்திருடி, சப்பைக்காலையுடைய அண்ணன் பெருவயிறன் இச்செய்தி பறைசாற்றியதுபோல லோகப்பிரசித்தமாயிருக்க, இந்த ஆறுமுகக்கடவுளுக்கு இவ்விடத்தில் இதென்ன பெருமையென்னும் பொருளையமைத்துப்பாடியது.

"அப்பனிரந்துண்ணி யாத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாம னுறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிற னாறுமுகத் தானுக்கிங்
கென்ன பெருமை யிது."

ஒரு சிவஸ்தலத்திற் சுவாமி வீதிப்புறப்பாடாகிவரக்கண்டு தரிசிக்கும்பொழுது, அவ்விடத்திற் சிலர் இந்தப் புறப்பாட்டைக்குறித்து ஒன்பது சாதிப்பெயர் வருவதாக ஒரு கலித்துறை பாடவேண்டுமென்ன, இவர் சல்வநாயகனை வாழ்த்துதல்செய்ய, இடபம் சுமக்க, வைரவ மூர்த்தியும் சுப்பிரமணியக்கடவுளும் இந்திராணி கணவனும் போற்றுதல் செய்ய, பாற்கடலில் பள்ளிகொள்ளுந் திருமால் யாவர்க்கு முன்னே செல்ல, தித்திப்பாகிய வளைந்த கருப்புவில்லையுடைய காமதேவன் தாழ்ந்து வணங்க, பெருமை தங்கிய, மான்தோலையுடைத்த, ஜடாமகுடந் தரிய சிவ எங்கும் தட்டாத சிவபெருமான் வீதிப்புறப்பாட்டெழுந்தருளியது அதிவிநோதமாயிருக்கிறதென்னுங் கருத்தை அமைத்து, மேற்படியார் சொன்னவண்ணம் அவ்வொன்பது சாதிப்பெயரும் வரும்படி சிலேடையாகப்பாடியது.

"வாணியன் வாழ்த்திட வண்ணான் சுமக்க வடுகன்செட்டி
[illegible]போற்றத் திரைப்பள்ளி முன்சொல்லத் தீகரும்பின்

"*கோணியன் ஞமுக் கருமான் ருமிலிக் கோ[illegible]
வேணியனுடைய தட்டாணைபுறப்பட்டல் வேடிக்கையே"

ஓருரிற் சர்க்கார் உத்தியோகஸ்தனுகிய விகடராமைய னென்னும் மாத்துவப்பிராமணனொருவன் அப்பொழுதே விழுந்து சாகிறதாய் மிகவும் மெலிந்து இளைத்த நடைகொண்ட தென்னுலராமலிங்கன் வளர்த்த குதிரைபோலிருக்கின்ற ஒரு நாட்டுத்தட்டைப் பிடித்து அதன் முதுகிற் சாக்கை சேணமாய்வைத்து, "வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோற்புரி கடிவாள" மென்ற பழமொழிப்படி கயிற்றைக் கடிவாளமாய்ப்போட்டு அக்கடிவாளத்தை இடதுகையிற்பிடித்து, வலதுகையிற் புளியமிலார் கொண்டு அடித்து, இரண்டுகால்களினாலும் வயிற்றிலிடித்து நடத்த நடவாததைக்கண்டு, தன் அதிகாரத்தின் கீழிருக்கின்றவர்களைப்பார்த்து இதை நடத்திக்கொண்டு போங்களென்று உத்தரவுசெய்ய, அவர்களிற் சிலர் முன்புறத்தில் வந்து கடிவாளத்தைத் தொட்டிழுக்க, சிலர் பின்புறத்திலிருந்து தட்டித்தள்ள அப்படியும் அது விசையாய் நடவாமல் மெள்ள மெள்ள அடிமேலடிவைத்து நடப்பதைக் காளமேகப்புலவர் பார்த்து, எப்போதும் வாயோயாமல் வேதாத்தியயனம் பண்ணுகின்ற விகடராமையனென்பவன் ஏறிச்செலுத்தும் குதிரையானது, கடிவாளத்தைத்தொட்டு முன்பக்கத்தில் மூன்றுபேர் வலித்திழுக்கவும், பின்பக்கத்திலிருந்து இரண்டுபெயர் கையினால் தட்டித்தள்ள அந்தப்படியில் ஒரு மாதத்திற்குக் காதவழிக்குக் குறையாமல் விரைந்துபோகின்றதெனப் பரிகாசமாகப் பொருளமைத்துப்பாடியது.

* கோணியன் - சணற்பையன்.

"முன்னே கடிவாள மூன்றுபேர் போட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள — எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போங் காதவழி."

சித்திரைமாதத்தில் ஓருருக்குப் பிரயாணம் பண்ணிப்போகையில் வழிநடுவில் உள்ள திருச்செங்காட்டுச் சத்திரத்தில் ஒருநாளிராத்தங்கி யிருக்கும்பொழுது காற்றுவீசாமல் தமக்கு அதிக வெப்பமாயிருந்ததனால் காள மேகப்புலவர், பக்தசிரோமணியாகிய சிறுத்தொண்டரை [illegible] சித்த கறி சமைத்த பிள்ளையை நம்முடனே கூட உண்ணுதற்கு அழைத்து வாருமென்று சொல்லி, அப்பிள்ளையின் வரவை [illegible] ருமானுடைய திருச்செங்காட்டங்குடி [illegible]

காசிக்கங்கையைக் கமண்டலத்தில் முகந்து கையிலேந்திய அகஸ்திய முனிவனுடைய பொதியமலையிலிருந்து உண்டாகும் தென்றற்காற்றை, ஒற்றைக்கொம்பினை ஏந்திய விநாயகமூர்த்தியின் பிதாவாகிய பரமசிவன் பூஷணமாகப் பூண்ட சர்ப்பந்தான் இப்பொழுது உணவாக உட்கொண்டு விட்டதோ, எப்பொழுதும் இயங்குகின்ற காரணத்தால் சதாகதியென்று பெயர்பெற்ற காற்று இயங்காததென்னமாயம்? என்னும் கருத்தமைத்துப் பாடியது.

"அம்பேந்து கையா னவன்பதியி * லெம்மானைக்
கொம்பேந்தி தந்தைபணி கொண்டதோ—அன்பா
அரிந்த மகவை யழையென்று சொல்லி
இருந்தவனைச் செங்காட்டிலே,"

இந்தப்படி காளமேகப்புலவர் நவ நவமாகக் கருத்தமைத்துக் கவி பாடி ஸ்தலதரிசனம் செய்துவருகையில், திருமலைராயன் பட்டணத்திற் கல்வியில் மிகச் சிறந்தவர்களென்று அவ்வரசன் வியந்துகொடுத்த தண்டிகைப் பரிசுபெற்ற புலவர்கள் அறுபத்துநாலவரும், அவர்களுக்குத் தலைவனாகிய அதிமதுரகவி யென்பவனும் தமிழில் தங்களுக்குச் சமானம் ஒருவருமில்லையென்று அகங்கரித்து, உலகத்திலுள்ள, மற்ற புலவர்களையெல்லாம் மதியாமற் பலவாறாக நிந்தித்து அவமானப்படுத்தி வருகிறார்களென்றும், அதற்குத் திருமலைராயனும் உடன்பட்டிருக்கிறானென்றும் செய்தி கேட்டு, வித்வான்களாயிருப்பவர்கள் ஆராயினுமென்ன, அப்படிப்பட்டவர்களை அவமதிக்கலாமா? அவர்களை இகழ்ந்தது கடவுளை இகழ்ந்த தல்லவா, பூர்வம் ஒட்டக்கூத்தனென்பவன், "கற்றதுகையளவு கல்லாதுலகளவு" என்றெண்ணாமல், தானேவித்தையில் அதிகவல்லவனென்று மமதை கொண்டு கொஞ்சிரசுகமின்றிப் புலவர்களைச் சிரச்சேதம் பண்ணிவந்தான். அதுகண்டு அக்காலத்திற் புகழேந்திப் புலவரானவர் அவனுக்குத்தக்கபடி காவப்பிராயசித்தம் செய்வித்து அநேகரைக் கொலைக்குத் தப்புவித்து நடசித்திப புண்ணியம் தேடிக்கொண்டார் அந்தப்படி இந்தக்காலத்தில் திருமலைராயன் சமஸ்தானத்திலிருக்கும் வித்வான்கள் நான் நானென்று இருமாப்புற்று "நகருகிறநாய் செக்கென்றும் சிவலிங்கமென்றும் அறியாதது போல" கல்லார் பொல்லாரென்று அறியாமலும் "அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியாததுபோல" பாடிய அருமை தெரியாமலும்

* ஐம்மா - கால், இது இவ்விடத்திற் காற்றினையுணர்த்தி நின்றது

பிரசண்ட கவிகளையெல்லாம் பழித்துக்கொண் டிருக்கிறார்களே இவர்க ளுடைய அகந்தையை நாம் போய் அவசியம் அழிக்கவேண்டுமென்ற பிர திக்கினையுடனே ஒருநாள் அவ்விடத்திற்குப்போக யத்தனப்பட்டிற சம யத்தில் அவளை மோகனாங்கியென்னும் தாசி கண்டு, திருமலைராயன் பட் டணத்துத் துறைமுகத்தில் விசேஷமாய முத்துக் குளிக்கிறதாகவும், அம்முத்து மற்றத்துறைகளில் குளிக்கப்படுகிற முத்துகளிலும் மிகச்சிறந் ததாகவும், திருமலைராயனே அந்தவியாபாரம் செய்வதாகவும் சொல்லு கிறார்கள், ஆனகயால் அங்கேபோய்த்திரும்பி வரும்பொழுது மறவாமல் எனக்கு மார்பிலணியுங் கச்சுக்கு முத்துவாங்கி வரவேண்டு மென்றாள். அதுகேட்டு நல்லது அப்படியே ஆகட்டுமென்று சொல்லி அவளிடத் திற் செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டு அப்பட்டணத்துக் கடைவீதி யில் வந்தார்.

இவருக்கெதிரே மேற்சொல்லிய அதிமதுரகவியென்பவன் தனக்குப் பின்னும் முன்னும் இருபக்கங்களிலும் அறுபத்துநாலு தண்டிகைப்புல வர்களும் வரிசை வரிசையாக நெருங்கிச் சூழ்ந்துவர, அவர்கள் நடுவில் நிலமலையொன்று உரலபோலப் பருத்தகால்களும், பனைபோல நீண்ட துதிக்கையும், ஆலவட்டம்போலப் பரந்த செவிகளும், பிறைபோல வளைந் த கொம்புகளும், மலைச்சிகரம்போல உன்னதமாகிய மஸ்தகமும், சாமரம்போல அசைகின்ற வாலும் முளைத்து எழுந்து நடப்பதுபோல நடக் கின்ற மதயானைமேல் நவரத்னமயமாகிய தவிசிட்டேறி, துஜம் சத்திர சாமரமுதலிய விருதுகள் பிடிக்க, கட்டியம் கூற அதிக ஆடம்பரத்துடனே ராஜசமுகத்தை நாடிவருவதுகண்டு, தாமப்பால் விலகிப்போகாமல் அப் புலவர்கள் ஏறிவரும் தண்டிகைக்காரர்களின் மத்தியில் வந்து நிற்க, அது கண்டு கட்டியக்காரன் தண்டிகைக்காரர்க்குட்பட்டவர்கள் எப்படிப்பட்ட வர்களாயினும், அவர்கள் தங்கள் வாயினால் அதிமதுரகவியென்பவனுக்கு ள்ள விருதைச்சொல்வது நெடுநாளைய வழக்கமாயிருப்பதால் அவ்வழக் கப்படி, இவர் மார்பிலே தனகையிலிருந்த மான்தோற் பட்டையால் தட் டி அதிமதுரகவிராய சிங்கம் பராக்கென்றுசொல்லென்றான். இவர் இழ வுக்கு வந்தவர்களையெல்லாம் தாலியறுக்கச்சொன்னால் அறுப்பார்களா, அதுபோலத்தெருவிலேபோகிறவர்கள் வருகிறவர்களையெல்லாம் இவன் பெருமையைச் சொல்லச்சொன்னால் சொல்வார்களா, ஆயினும் இவன் பெற்ற பெருமைதானென்ன? துடைப்பக்கட்டுக்குப் பட்டுக்குச்சக்கட்டுவது

போல அதிமதுரகவிராய சிங்கமென்று பெயர் வைத்துக்கொண்டு விரு துகூறிவருகிருனே—இவன் பாடும் பாட்டென்ன அத்தனை மதுரமானதா? தன்னைச் சிங்கமென்று சொல்வதைப்பார்க்கிற கொஞ்சமாவது இவனுக்கு மனங்கூசவில்லையே. இவன் எத்தனைவித்வான்களைச்செயித்தான். இதெல்லாம் வீண்புகழ்ச்சிதானே. இப்படிப்பட்டவனை வெட்கித் தலையிறக்கங் கொள்ளும்படி இவனைப் பரிகாசிப்பதே யுக்தமென்று நினைத்துக் கட்டியங் கூறுவோனைநோக்கி, அதிமதுரம் அதிமதுரமென்று உலகமெல்லாம் அறியும்படிப் பறைசாற்றினதுபோலப் பலமுறையும் எடுத்துச் சொல்லி இவனைமதுரமதோன்ற ஸ்துதிசெய்கின்றையே—இவனிடத்திலுள்ள புதுமையென்ன. இப்படிச் சொல்வதைப்பார்க்கிலும், காட்டிலுண்டாகிய சரக்கு, காரமில்லாத சரக்கு, தனியே பிரயோகிக்காமல் வேறுசரக்குகளுடனே கூட்டிப் பிரயோகிக்கப்படும் சரக்காகிய மலைக்குன்றிமணிவேரை உலகத்தார் தொன்றுதொட்டு அதிமதுரமென்று வழங்குவது சகசமாதலால், நீ அதைக்குறித்துச் சொல்லென்னும் கருத்தை அமைத்து,

"அதிமதுர மென்றே யகில மறியத்
துதிமதுர மாயெடுத்துச் சொல்லும்—புதுமையென்ன
காட்டுச் சரக்குலகில் காரமில் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்கதனைக் கூறு"

என்றொரு பாடலைச்சொல்லி ஏளனம் பண்ணினார்.

அது அதிமதுரகவி யென்பவனைத் தூக்கிப்போட்டாற்போல் விருந்ததால், அவன் ஆச்சரியப்பட்டு, சிறிதாவது பயமில்லாமல் இவ்வளவு துணிவுடனே பகிரங்கமாக நம்மைப் பரிகாசிக்கின்றுனே, இவனுரென்று அறியும்படி தான் இராஜசமுகத்திற்குப்போய்ச் சோமதமாதிராத்திலே சோலைக்காரனொருவனை அனுப்பி இனனவிடத்தில் ஒரு பிராமணனிருக்கிருன் அவனுடைய பெயரென்ன, அவன் எங்கிருப்பவனென்று விசாரித்துவாவெனச் சொன்னன், சோலைக்காரன் கேட்டுவந்து விசாரித்தபொழுது, காளமேகப்புலவர் என்பேரை முதலானவைகளை வாய்ச்சொல்லாகச் சொன்னால் நான் சொன்னபடி நீ போய்ச் சொல்வது பிரயாசம். விவரமாய் ஏட்டில் என் கைப்பட எழுதிக்கொடுக்கிறேனெனப்பதாகச் சொல்லி,

"தூதைக்கு நாழிகையி லாறுநாழிகைதனிற் சொற்சந்த மாலை சொல்லத், துகளிலாவந்தாதி யேழுநாழிகைதனிற் றொகை

படவிரித்துரைக்கப, பாதஞ்செய மடல்கோவை பத்துநாழிகைக்
னிற பரணியொருநாண முழுதுமே, பாரகாவியமெலா மோரிருதி
னததிலே பகரக்கொடிக்கட்டினேன, சிதஞ்செயுநதிங்கண மரபி
ளுனீடுபுகழ் செய்யதிருமலேராயனமுன், சிறுமாறுகவே தாறுமா
றுகளசொல திருட்டுககவிப புலவரைக, காதங்கறுததுச் செருப்
பிட்டடிததுக கதுபபிற புடைததுவெறறிக, கலலணையி னுடு
கொடிய கடிவாளமிட்டேறு கவிகாளமேகநானே."

எனததாம ஆசுகவி பாடுமே திறததைச சிறப்பிததும், தமது பெயரை வெளிபபடையாகசசெபபியும, திருமலேராயன சமஸதானதது விததுவான களசெயயும அககிரமததைக குறிபபிதது அவாகளை இகழநதும ஒரு சீட்டுக்கவிஎழுதி அதைதசசுருட்டிச செநதிரிகைமபோட்டு, இதைககொண்டு போயக கொடுவென்று கொடுததனுபபினா.

அதிமதுரகவிராயன முதலானவாகள அதை வாங்கிவாசிதது, இதை எழுதினவன காளமேகமெனபவனு, பாமபுககுப பலலிலும, தேளுக்குவா லிலும ஏகதேசமாக விஷமிருக்குமெனபாாகள். இவனுககு உடல்முழுதும விஷமயமாயிருககிறது. ஆதலால், இவன் பொல்லாததுஷடனென்றும, அகஙகாரமே கால கை முதலிய உறுபபுகளாய உருவெடுததுவந்தவனென றும, கண்டவாகளமேலெலலாம வமபும தும்புமாக வசைபாடுகிறவனென் றும இவனுடைய சமாசாரம முனனமே நமககுக கேளவிதானே. அப படியிருகக இபபொழுது நமமையும அவாகளைபபோல இலேசாக நினைத துக்கொண்டு, கொஞசமாவது மதிபபிலலாமல வாயககுவநதபடி யெல் லாம அதிகிரதசசீட்டுககவி எழுதினன பாாததையா! இப்படிப்பட்டவனைச சுமமாவிட்டபபோமா கொட்டினலதேள கொட்டாவிட்டாற பிள்ளைபபூச சியலலவா ஆதலால், இவனைச சிவிகைச சிவிககவலிதது மானபங்கப படுததித தகக சிட்சைசெய்விததாலொழிய இவன் அடஙகமாட்டானென று தஙகள அரசனுடனும ஆலோசிதது, நாலுபெயா சேவகர்களை விடுதது அநதக காளமேகமெனபவன யெஙகேயாவது ஓடியொளிததுப போகப போகிறன. இநத கொடிககுளளே கைபபிடியாகப பிடிததுவந்து ஒப்பிக கவேணடுமெனன, அககால்வரும பேயபப பெரும புலிகளபோல் அவரைச சூறறிககொணடு நீ சுமமா வருகிறையா, உன்னைப பிடித்துக் கட்டிக்கொண டுபோக வேணடுமாவெனறாாகள புலவா நீஙகளாா என்னை எங்கே அ ழைககிறீாகளெனன, அவாகள நாஙகள திருமலேராயன் சேவகர்கள். அ வாிடததிறகுததான உனனை அழைககிறோமென்ன, இவா அங்கு ஏதுக்காக

வரச்சொல்லுகிறீர்களென்ன, சேவகர் நீ எங்கள் ராஜசமஸ்தானத்து வித்வான்களைத் தூஷித்ததையே அதற்காகத்தானென்ன, இவர் பின்னையொன்றும் செய்யவில்லையே இதற்குத்தானோ பிடிக்கிறதும் கட்டுகிறதும் என்னைத் தொடவேண்டாம் தூர நில்லுங்கள். நானே வருகிறேனென்று, கடையில் எலுமிச்சம்பழமொன்று வாங்கி கையில்வைத்துக்கொண்டு ராஜசமுகத்தை நோக்கி வருகிறார்.

இதற்குள் அவ்விடத்தில் அதிமதுரகவியென்பவன் அறுபத்துநாலு தண்டிகைக் காரரையும் பார்த்துக் காளமேகனென்பவன் இவ்விடத்திற்கு வந்தால் அவன் அரசனருகில் கிட்டிச் செல்லாதபடி நீங்களெல்லாரும் நெருங்கி உட்கார்ந்து உங்களாசனத்தை விட்டெழுந்திராமலிருங்களென்று திட்டஞ்செய்து, பின்பு ராஜாவை நோக்கி அந்தவம்பனைத் தாங்கள் வாவென்றழையாமலும், அவனுக்கு ஆசனங்கொடாமலும், சம்மானஞ் செய்யாமலுமிருக்கவேண்டுமென்று சொல்லி எச்சரிக்கையா யிருந்தான். அப்படியிருக்கையிற் புலவர்பெருமான் வந்துபார்த்து நாம் உட்பிரவேசிக்கக் கூடாமல் இங்கே ஏதோ மித்துருபேதம் நடந்திருக்கிறதென்று கிரகித்துக் கொண்டு, தாம் உட்செல்லாமல் ஆஸ்தான வாசல்நடையிலிருந்தபடியே இதற்கேற்ற உபாயமொன்று செய்யவேண்டுமென்று, ஒரு சுலோகஞ் சொல்லி அரசனை ஆசீர்வதித்து அந்த எலுமிச்சம்பழத்தை அவனுக்கெதிரே நீட்டினார். பிராமணர்கள் ஆசீர்வசனம்பண்ணி அட்சதையாவது புஷ்பமாவது மற்றேதாவது கொடுக்கவந்தால் வாங்காமலிருப்பது விதியல்லவே அதுபற்றி அவன் தன் கையை நீட்டினான். நீட்டிய கையில் இந்த எலுமிச்சம்பழம்போய்ச் சேரவேண்டுமே அதனால் யாவரும் விலகி வழிவிட்டார்கள், காளமேகப்புலவர் தாராளமாக அச்சபைநடுவே சென்று அதை வேந்தன் கையிற் கொடுக்க அவன் வேண்டாமென்று சொல்லாமல் வாங்கிக் கொண்டதன்றி, அவருக்கு ஆசனம் கொடுக்கவும், உட்காருமென்று சொல்லவுமில்லை. அது தெரிந்து ஜம்புகேசுரத்தின் திசையை நோக்கி மானசிகமாக ஸ்ரீ அகிலாண்டவல்லி விமானத்தைத் தரிசித்து, சாரதையைத் தியானித்து,

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியாசனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனத்துவைத்த தாய"

என்பதை உள்ளிட்டமுப்பது வெண்பாவிற் சரஸ்வதிமாலையென ஒரு பிரபந்தம் பாடினார். பாடினமாத்திரத்தில் வாணிகடாட்சத்தால் திருமலைராயனிருந்த ஆசனம் ஒரு புறத்தில் வளர்ந்து இடங்கொடுக்க, அதில் அவர் அவனுடன் சமானஸ்கந்தமாக வீற்றிருந்தார்.

இவ்விதமாக ராஜசிங்காசனம் வளர்ந்து இடங்கொடுக்க அவர் அதன் மேலேறி உட்கார்ந்தத்தருணத்தில் அவர்களெல்லாம் இதென்ன மந்திரமோ, மாயமோ, அல்லது கண்கட்டு வித்தையோ வென்று பிரமிப்புடனே பார்க்கையில், புலவர்பெருமான் அந்தப்புலவர்களை என்னைவைத்தகண்வாங்காமல் ஊடுருவப் பார்க்கிறீர்களே நீங்களார் தெரியச்சொல்லவேண்டுமென்றுகேட்க, அவர்கள் நாங்கள் இந்தச் சமஸ்தானத்திலிருக்கும் கவிராஜர்களென்று உத்தரஞ்சொல்ல, இவர் கவிராஜரென்பதற்குக் குரக்கரசரென இடக்கரடக்கப் பொருள்கொண்டு, குலுக்கென்று நகைத்து அவர்களை உல்லங்கனம் பண்ணும்படி, ஓ! ஓ! புவியரசர்களாற் புகழப்படும் புலவர்களே! நீங்களாவென்று உங்களைக்கேட்டால் கவிராஜர்களென்கிறீர்களே. கவிராஜர்களாயிருந்தால் உங்கள் ஜாதிசுபாவப்படி வாலிருக்கவேண்டுமே, அதெங்கே? வாலில்லாமையால் நீங்கள் வாலில்லாத குரங்குகளென்றல்லவோ சொல்லப்படுவீர்கள். அப்படித்தானென்று ஒப்புக்கொண்டாலும், நீண்டு வளர்ந்து வலிபெற்ற நகமிருக்க வேண்டுமே அதெங்கே? அல்லாமலும் நாமுகாவிருக்கவேண்டுமே அவை எங்கே? காலாகக் கையைப்பாவித்துக் கொள்ளலாமென்றாலும், பீளைசார்ந்த கண்ணிருக்கவேண்டுமே அதெங்கே? சொல்லுங்களென்னும் கருத்தினை உள்ளமைத்து,

"வாலெங்கே நீண்டெழுந்த வல்லுகிரெங் கேநாலு
காலெங்கே யுள்வடிந்த கண்ணெங்கே—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்கா ணீங்கள்
கவிராய ரென்றிருந்தக் கால."

என்றொரு வெண்பாப்பாடினார். இதிற் குரக்குகளென்று இழித்துரைத்தாலும், அவர்களைப்போலத் தாமும் புலவராகையால் அந்தச் சஜாதி யபிமானம் போகாமற் புவிராயர்போற்றும் புலவீர்களென்று சிறப்பித்தார்.

அதையவர்கள் அவ்விதமாக நினையாமல் இவன் எட்டிக் குடுமியைப் பிடித்து இறங்கிக் காலைப்பிடிக்கிறவன் போல, இத்தப்பாட்டிலே நம்மையெல்லாம் குரக்குகளென்று பிரதியட்சத்திலேயே நிந்தித்து, அதனோடு

கூடக் கொஞ்சம் முகஸ்துதியாகப் புவிராயரைப்போற்றும் புலவீர்களென்னுன். முன்புசெடுக்கவியிலும் தூஷித்திருக்கிறுன். இவனுடைய நெஞ்சுத் துணிவுதான் என்னவென்று சிந்தித்துப் பிறகு அவரை நோக்கி, இந்தச் சமஸ்தானத்தில் வெகுகாலமாகப் பெயர்பெற்றிருக்கின்ற எங்களை இன்று வந்து முளைத்த நீ ஆரென்று கேட்கிறையே நீயார் சொல்லென்று கேட்டார்கள். இவர் நாம் காளமேகமென அறியீர்களாவென்ன, அவர்கள் நீ காளமேகமா நல்லது. காளமேகமென்பது கறுத்தமேகமாதலாற் பொழியவேண்டுமேயென்ன, இவர் பொழியத்தான் வந்ததென்ன, அவர்கள் எப்படிப் பொழியவந்ததென்ன, புலவர் சிரோமணி, கழியினிடத்திற்செல்லும் கடல்நீரானது உப்புமயமாயிருப்பதென்று அதை ஒழித்து, சாஸ்திரமாகிய கடலில் அதன் சாரமாகிய நீரை முகந்து, அருவியாறு வழிந்தோடுகின்ற தமிழ் பிறந்த பொதியமலையிற் காலூன்றி, கடுமையாகிய கவிகளைப் பாடுகின்ற புலவர்கள் மனதினகணமே பயஞ்செனிக்க இடித்து அவர்கள் காதுகள் செவிடுபடக்குமிறி, கண்கூசமின்னி, கவியாகிய மழைபொழியும்படி காளமேகமானது புறப்பட்டதென்னும் கருத்தை அமைத்து,

"கழியுந் தியகட லுப்பென்று நன்னூற் கடலின்மொண்டு
வழியும் பொதிய வரையினிற் காலவைத்து வனகவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே."

என்றெரு பாடல் பாடக்கேட்டு, அதிமதுரகவியென்பவன் அதிக ஆச்சரியங்கொண்டு அவரை முன்னிட்டு, வெளிலைக்கவி பாடித்திரிகின்ற காளமேகமே! மூச்சுவிடுவதற்கு முன்னே முன்னூறு அல்லது நானூறு பாடல் பாடப்போகாதா? மூச்சுவிட்டாச்சுதென்றால் ஐந்நூறு பாடல் வரையிலும் ஆகாதா? இதற்கித்தனைபேச்சென்ன, சும்மா ஆடம்பரமாக உன்னுடைய கள்ளக்கவிக்கடையைப் பரப்பவேண்டாம் அந்தமட்டிலே அதைக் கட்டென்னும்கருத்துத் தோன்ற,

"மூச்சுவிடு முன்னமே முந்நூறு நானூறும்
ஆச்சென்றா லைந்நூறு மாகாதோ—பேச்சென்ன
வெள்ளைக் கவிகாள மேகமே யுன்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு."

(ஆயிற்றென்பது - எதுகைநோக்கி ஆச்சென மரூஉவாக அமைக்கப்பட்டது, வெள்ளைக்கவி-வெண்பா) என்றெரு பாடலைச்சொல்லி அவன் தன

பெருமையை வெளியிடுங் கவிசிரேஷ்டராகிய இவரை இழிவுசெய்து பொழுது, இவர் நீ மூச்சுவிடுகிறதற்குமுன்னே மூந்நூறு நானூறு பாடல்வரையிலும், ஆச்சென்றால் ஐந்நூறுபாடல்வரையிலும் பாடுகிறதாகச் சொன்னையே-இதோராச்சரியமா, நான் சொல்வதைக்கேள். வாயைத் திறவாததற்கு முன் எழுநூறு எண்ணூறு பாட்டளவிலும், ஒருமுறைவாயைத் திறந்து மூடினால் ஆயிரம் பாட்டளவிலும் ஆகாதா, பாடுகிறதற்கு ஒரு நிமித்தமுமில்லாத்தகாலத்திற் சும்மாவிருந்தா லிருப்பேன். ஆவசியமுண்டாய்ப் பாட ஏற்பட்டேனானால், யானைத்துதிக்கைபோலப் பெரிய தாரைகளாக வருஷிக்கும் மேகம் நானென்று நினைப்பாயென்றும் கருத்தமைத்து,

> "இம்மென்னு முன்னே யெழுநூறு மெண்ணூறும்
> அம்மென்றா லாயிரம்பாட் டாகாதா—சும்மா
> இருந்தா லிருப்பே னெழுந்தேனே யாயிற்
> பெருந்தாரை மேகம் பிளாய."

(இம்மெனல்-வாய்திறவாமையையும், அம்மெனல்-வாய்திறந்து மூடுகையையும் உணர்த்திய குறிப்புச் சொற்கள்) என்பதாக ஒரு கவிபாடித் தமது வல்லமையைக் குறிப்பித்தார்.

அதை அதிமதுரகவி கேட்டு, தூக்கிநிறுத்தடா பிணக்காடாய் வெட்டுகிறேனென்பவனைப்போல வெகு சாமர்த்தியமாகப் பேசுகிறானே-இவன் சொல்வது மெய்யாயிருக்குமா, அதேது, "ஆராத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரியு" மென்பதுபோல, இன்னும் சற்றுநேரத்திற்குள்ளே பொய் மெய்யெல்லாம் பட்டப்பகலாய்த் தெரியவருகிறதென்று நினைத்துக் காளமேகப்புலவரை நோக்கி, "கூரம்பாயினும் வீரம்பேசேலென்பதை" அறியாமல், நீ இவ்வளவு வீரம் பேசுகிறையே-அரிகண்டம் பாடிப் பார்ப்போமென்றான் இவர் அரிகண்டமாவது என்னவென, அவன் கழுத்திற் கத்தி கட்டிக்கொண்டு எதிரிகொடுக்கும் சமிசைக்கு இணங்கப் பாடுவதுதான். அப்படிப்பாடுமிடத்தில் ஏதாவது தவறினால் அந்தக் கத்தியினாலேயே வெட்டுண்ணவேண்டி வருமென்ன, அதற்கு இவர் கைகொட்டிச் சிரித்து இதுதானா அரிகண்ட மென்பது. இத்தனை சுலபமானதை ஒரு விஷயமாகத் தேடிச் சொல்லவந்தையே இதிலென்ன அருமையிருக்கிறது. இது நிற்க, யமகண்டம் பாடுகிறதல்லவோ மகாபிரயாசம். அதைக்குறித்துப் பேசுவதுதான் கௌரவமென்றுசொல்ல, அவன் யமகண்டமென்றால் என்

திருக்கிறதா அது எப்படிப்பட்டதென்ன, இவர் பூமியிற் பதினாறடி நீளம், பதினாறடி அகலம், பதினாறடி ஆழமாக, சதுரத்திற்குச் சதுரம் ஒரு பெரிய குழிவெட்டி, அதன் நான்கு மூலையிலும் பதினாறடி இருப்புக்கம்பங்களை நாட்டி, கம்பத்தின்மேல் நாலுபக்கத்திலும் இரும்பினால் நாலுசட்டமும், நடுவே யொருசட்டமும்போட்டு, நடுச்சட்டத்தில் உறிகட்டி, குழிக்குள், பருத்த புளியங்கட்டைகளை நெருங்க அடுக்கி, கட்டைக்குள் நெருப்பு மூட்டி, அது கனன்றெழுந்து சுவாலித்து எரிந்துகொண்டிருக்க, அந்நெருப்பில் ஒரு ஆளுயரமான இருப்புக்கொப்பரை வைத்து, கொப்பரைநிறைய வெண்ணெய்விட்டு அதில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணிகளை நிரப்பி, அவைநன்றாய்க்காய்ந்து உருகிக்கொதித்துக்கொண்டிருக்க, நான்கு யானைகளைப் பாகர்கள் மதமேற்றிக் கொண்டு வந்து கம்பத்திற்கு ஒவ்வொன்றாக மலைகளைப்போல் நிறுத்திவைத்திருக்க, பின்புறத்தில் வளையம்வைத்து வளையத்திற் சங்கிலிகோத்து நயத்த எஃகுவினாற் கூர்மையாகச் சமைத்துப் பளபளவென்று மின்னும்படி சாணைபிடித்த எட்டுக்கத்திகளைக் கழுத்தில் நாலும், அரையில் நாலுமாகக் கட்டிக்கொண்டு, கத்திகளின் புறத்திலுள்ள சங்கிலிகளை மேற்படி யானைகளின் துதிக்கையிற் கொடுத்துவைத்து, தான் கொப்பரிக்கு நேராகத் தொங்குகின்ற உறிநடுவில் ஏறியிருந்து, எவரேவா என்ன என்ன சமிசை கொடுத்தாலும் அவைகளை அக்கொடியிலேதானே தடையின்றிக் குறித்த கருத்தின்படி இசைத்துப் பாடவேண்டியது அவ்வாறு பாடும்பொழுது எவ்வளவாவது வழுவுமானால் சமிசைகொடுத்தவர்கள் யானைமேலிருக்கும் பாகர்களுக்குக் கண் சைகை காட்ட, அவர்கள் யானைகளை மஸ்தகத்தில் அங்குசத்தாற் குத்தி அதட்ட, அவைகள் தமது துதிக்கையிற் கொடுக்கப்பட்டிருக்கும் சங்கிலிகளை வசையாயிழுக்க, இழுத்தவுடனே புலவன் கழுத்தும் அரையும் கத்திகளாற் றுண்டிக்கப்பட்டு, தலையொருதுண்டமும், அரை முதற் காலளவும் ஒருதுண்டமுமாகி, அவ்வெண்ணெய்க் கொப்பரியில் விழுந்து மாண்டுபோகிறது இப்படிப்பட்டதுதான் யமகண்டமென்றார்.

காளமேகப்புலவர் இவ்வண்ணஞ்சொல்லக்கேட்ட மாத்திரத்தில், அதிமதுரகவி மனம் நடுக்குற்று அடா அப்பா! யமகண்டமென்பது இப்படிப்பட்ட கோரமானதா, இது உள்ளபடி யமகண்டத்திற்கு ஒப்பாயிருப்பதனாலேதான் இதற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டதாகக் காண்கின்றது இவ்வாறுசெய்ய ஆராலேயாகும், அசாத்தியம் அசாத்தியமென்று

தனக்குள்ளே எண்ணி அதிசயித்து, பின்பு புலவர் பெருமானைப்பார்த்து நீ சொன்ன யமகண்டம் தகுதியானதுதான். ஆயினும் சும்மா வாயினாலே டம்பமாகச் சொல்வதனால் என்னபிரயோசனம். "மாடுதிருப்பினவனல்லவோ அர்ச்சுனன்" அதுபோல, சொன்னபடி செய்வதல்லவோ கௌரவம், ஆகையால் செய் பார்ப்போமென்றான். இவர் சபாசு ஆடவிட்டு நாடகம் பார்க்கிறது போல என்னைச் செய்யச்சொல்லிப் பார்க்கிறதென்ன, நீ முதல் முதல் இந்தவிஷயத்தை எடுத்துப்பேசினதினாலும் வெகுநாளாக யாவருமறிய நடுத்தெருவிலே அதிமதுர கவிராயசிங்கம் பார்க்கென்று விருது கூறிக்கொண்டு வருகிறபடியினாலும், செய்யவேண்டிய கடமை உன்னுடையதே. அப்படியிருக்கக் குரங்கு குட்டிக் கையைத் தோய்க்கிறதுபோல என்மேலேசாத்தி என்னைத் தூண்டிவிட்டு நீ தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது சரியோ, இது விருது கூறிவந்தது செடியில் நுழைகிறதுபோலாகுமல்லவோ வென்றார்.

அத்தருணத்தில் அதிமதுரகவியும் அறுபத்துநாலு தண்டிகைப்புலவரும் திருமலைராயன் முன்னிலையில் ஒருசேரக்கூடி, இவன் எதிரிகளை மதியாத துனமாகக்னுயிருக்கிற படியினாலே, தந்திரமாக இவனையே அந்த யமகண்டத்தில் மாட்டி இவனுடைய கொழுப்பை அடக்கவேண்டுமென்று தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டு, அப்படிச்செய்ய வேண்டுமென்று எங்களுக்கு அவசியமில்லை. நீயே உன்னை அதிக சமர்த்தனென்று பெருமைப்படுத்தியும் எங்களையிழித்தும், சீட்டுக்கவிபாடி யனுப்பினதனாலும், நாங்கள் சுளுவாக அரிகண்டம் பாடச்சொன்னால், கிணறுகுத்தப்பித்தியிலே பாய்ந்ததுபோல, அதை விலக்கி உன்வாயினாலேயே யமகண்டம் பாடுகிறதைக் குறித்துப் பேசினதனாலும், நீதான் அந்தப்படிச் செய்ய வேண்டுமென்றார்கள்.

அவர்கள் அப்படிச் சொல்லக்கேட்டுப் புலவர் சிகாமணியானவர் கல்வித்திறமும் கவி சாதுரியமுமில்லாத இவர்களை யமகண்டம் பாடச்சொல்லுகிறது, வீரமில்லாத பேடியைப் போருக் கழைக்கிறதுபோலல்லாமல் வேறல்ல. அதனால் அதை நாமேசெய்துகாட்டி இவர்கள் இறுமாப்பை அடக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, நீங்கள் வருத்தப்படவேண்டாம். தலைகீழாகக் கரணம்போட்டாலும் இது உங்களால் ஆகத்தக்கதல்ல. நானே செய்கிறேன் பாருங்களென்று உடன்பட்டார். அவர் உடன்பட்ட

மாத்திரத்தில் அவர்கள் இனிதாமதிக்கலாகாதென்று யமகண்டத்தைக் குறித்து அவர் சொன்னபடி ஏவலாளர்களைக் கொண்டு ராஜாவின் சபா மண்டபத்திற்கு நேரிலே குழிவெட்டித் தழல்மூட்டி எண்ணெய்க்கொப் பரைவைத்துக் குழிக்குநாற்றிசையிலும் இருப்புக்கம்பம் நாட்டிக் கம்பத் தின்மேற் சட்டம் போட்டு நடுச்சட்டத்திற் கொப்பரைக்குமேலே உறிகட்டிப் பாகர்களால் யானைகளை மதமேற்றிக் கொண்டுவந்து கம்பத்திற் கொவ் வொன்றாக நிறுத்தும்படி செய்தார்கள். புலவர்பெருமான் கழுத்திற்கும் அரைக்கும் கத்திகட்டிக் கொண்டு கத்திகளின் பின்னுள்ள வளையங்களிற் கோத்திருக்கும் சங்கிலிகளை யானைகளின் கையிற்கொடுத்துவிட்டுத் தாம் உறியின்மேலேறி முகமலர்ச்சியுடனே மண்டலமிட்டிருந்து, திருமலைராயனு டைய அனுமதி பெற்றுக்கொண்டு அதிமதுரகவி முதலானவர்களை நோக்கி, நீங்கள் காலதாமதம் செய்யாமல் உங்களிஷ்டப்படி கருக்கொடுக்கவேண் டிய சமிசைகளைத் தடையின்றித் தாராளமாகக் கொடுக்கலாமென்ன, அவர் கள் இவருடைய தைரியத்தையும் முகவிகாசத்தையும் உறியேறிப் பயமின் றிக் கம்பீரமாக வீற்றிருப்பதையுங்கண்டு அம்மம்மா! இவனுடைய தைரியந் தான் எப்படிப்பட்டதென்று ஆச்சரியப்பட்டு, நாமிதை முற்றுமுடியப்பார்க் கவேண்டுமென்று யாவரும் சமீபத்தில் வந்திருந்து, அவரவர் வெகுவெகு மிகவும் அருமையாக ஆராய்ந்து தேடியெடுத்துத் தங்களிஷ்டப்படிக் கெல் லாம் நானாவிதமான சமிசைகள் கொடுக்க, அவைகளெல்லா வற்றையும் அகிலாண்டநாயகி அனுக்கிரகத்தாற் பொருள் செய்யாமலும், எவ்வளவி லும், இடர்ப்படாமலும் சுநாயாசமாக அவர்கள் கொண்ட கருத்துக்கிசையு ம்படி சித்திரவிசித்திரமாய நல்ல நயந்தோன்ற அர்த்தசுத்தத்தக்க அலங் காரங்களும் அமைத்து விரைவாகப் பாடினார்.

அதிமதுரகவியும், அறுபத்துநாலு தண்டிகைப்புலவர் களும் தனித்தனி கொடுத்த சமிசைகளும்

காளமேகப்புலவர் பாடிய பாடல்களும்.

பிரதமத்தில் அதிமதுரகவி, திருமாலவதாரம்பத்தும் ஒருவெண்பாவில் அடக்கிப்பாடவேண்டுமென்ன, புலவர்பெருமான் இதற்கு ஒருவெண்பா வும்வேண்டுமோ நான் பாதிவெண்பாவிற் பாடுவேனென்று பாடியசெய்

"மெச்சுதிரு வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சன்ம மியம்பவா—மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய."

இதன்பொருள் தேவரும் முனிவரும் யாவரும்மெச்சுகின்ற திருவேங்கடத்தில் வீற்றிருக்கின்ற பெருமாளே! அடியேன் அபீஷ்டப்படி பாதிவெண்பாவில் உனது திருவவதாரம் பத்தும் இசைத்துக் கூறும்பொருட்டு நீ என்முன்னெழுந்தருளக் கடவாயென்று முற்பாதியில் திருவேங்கடமுடையானை பிரார்த்தித்து, தாம்பிரார்த்தித்த வண்ணம் பெருமாள் கடாட்ச விசேஷத்தால் அப்பத்தவதார மூர்த்திகளும் தமக்குப் பிரசன்னமாகக் கண்டு, பிற்பாதியில் மச்சா, கூர்மா, வராகா, நரசிங்கா, வாமனா, பரசுராமா, இராமா, பலராமா, கிருஷ்ணா, கற்கியென்று அவ்வவர் திருநாமங்களைத் தனித்தனியே குறித்து அழைத்தாரென்பதாம். இச்செய்யுளுக்கு, மெச்சுகின்ற திருவேங்கடத்தானே! பாதிவெண்பாவில் என்னிஷ்டப்படி, மச்சா, கூர்மா, வராகா, நரசிங்கா, வாமனா, பரசுராமா, தசரதராமா, பலராமா, கிருஷ்ணா, கற்கியென்று உன் திருவவதாரத்தைச் சொல்லும்படிவா வென்று பொருள் கூறுவாருமுண்டு (என்றென்பது-சொல்லெச்சம்.)

அறுபத்துநான்கு புலவர்களில் ஒருவர் இராசிகளின் பெயரும் முறையும் தொகையும் அடைமொழி யில்லாமல் ஒருவெண்பாவில் அமைத்துப் பாடவேண்டுமென்ன, முதலில் 'பகருங்கா' லெனவும், இறுதியில் 'வசையறுமி ராசிவள' மெனவும், சேர்த்துக்கொண்டு அவ்வாறேபாடிய செய்யுள்.

"பகருங்கா லேமேடமிடபமிதுனங் கர்க்
டகஞ்சிங்கங் கன்னி துலாம்விருச—சிகந்த
னுசுமகரங் கும்பமீ னம்பன்னி ரண்டுமே
வசையறுமி ராசி வளம்."

என்பதாம் (இடபம் மிதுனமென்பதில், மகரவொற்றுவிரித்தல் விகாரம்.)

ஒருவர், மும்மூர்த்திகள் பெயர், அவர்கள் இனும்கறி, உண்ணுமுணவு, ஏந்தும்ஆயுதம், பூணும்பூஷணம், ஏறும்வாகனம், வசிக்குமிடங்களை ஒரு வெண்பாவில் அடக்கிப்பாட வேண்டுமென்ன, அப்படியே பாடிய செய்யுள்,

"சிறுவ னளைபயறு செந்நெற்கடுகு
மறிதிகிரி தண்டு மணிநூல்—பொறியரவம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றூழும் பூவே கறி."

இ-ள். பிரமன் சிவன் விஷ்ணுவென்னும் மூவருக்கும், பிள்ளை-வெண்ணெய்-பயறு கறி, செந்நெல்-விஷம-பூமி உணவு, மான-சக்கரம-தண்டம ஆயுதம, கௌஸ்துவம்-உபவீதம்-சாபபமபூஷணம, ரிஷபம-கருடன-அன்னம வாகனம், கைலை-பாறகடல்-தாமரைவசிக்குமிடமென்பதாம.

ஒருவர், ஈயேறி மலைகுலுங்கினதாக ஒருவெண்பாபபாடவேணடுமென்ன, மலைமாத்திரமா உலகமுழுதும குலுங்கியதாகப பாடுகிறேனென்று பாடியசெய்யுள்.

"வாரணங்க ளெட்டு மகமேரு வுங்கடலும
தாரணியு நின்று சலித்தனவால—நாரணனைப
பணவாயிடைச்சி பருமத்தி னாலடித்த
புண்வாயி லீமொய்த்த போது."

இ-ள் ஸ்ரீமந்நாராயணன் கண்ணபிரானாக அவதரித்திருக்கையில் திருவாய்ப்பாடியில் வெண்ணெய் திருடினானென்று அவனை இராகமபோன்ற சொல்லினையுடைய அசோதைப்பிராட்டி பருத்தமத்தாற்கொண்டு அடித்தபுண்ணில் ஈயானது மொய்த்தபொழுது, அருவருப புண்டாகி அவனருமைத்திருமேனி அசைய, சதாகாலமும திருவுதிரத்திற்குள் அசையாதுவைத்து அவனாற் பாதுகாக்கப்படும உலகமும, அதிலுள்ள அஷ்ட-திக்கியானைகளும, மகாமேருவும், சப்த சாகரங்களும அசைந்தன வென்பதாம

ஒருவர், "குடத்திலே கங்கையடங்கும்" என்பதாகப் பாடவேண்டுமென்ன, அவ்வாறே பாடியசெய்யுள்.

"விண்ணுக் கடங்காமல வெற்புக் கடங்காமல
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர்சடாம
குடத்திலே கங்கையடங் கும்."

இ-ள். கங்காநதியானது அகன்ற வானத்திற்குள்ளும் அடங்காமல், மகாமேரு முதலாகிய மலைகளுக்குள்ளும் அடங்காமல், பூமிக்குள்ளும் அடங்காமல் எங்கும் சம்பூரணமாகப் பொங்கிப் பெருகிவந்தாலும், உமாதேவியை இடதுபாகத்தில் வைத்தருளிய பரமசிவனுடைய ஜடாமகுடத்தில் அடங்கிநிற்கு மென்பதாம். (மகுடத்திலேகங்கை யடங்குமென்பதின் முதலெழுத்தாகிய மகரத்தைப் பிரித்து மூன்றாம் அடியின் இறுதியிற்சேர்த்து, குடத்திலேகங்கை யடங்குமென்பதைச சமிசைக்கேற்க நான்காமடியிற் பொருத்தி முடித்தார்.)

ஒருவர் ஒன்றுமுதற் பதினெட்டெண்களை முறையே அடைசொல்லில்லாமல் ஒருவெண்பாவில் அடக்கிப் பாடவேண்டுமென்ன, அப்படியே அடக்கிப் பாடியசெய்யுள்.

"ஒன்றிரண்டு மூன்றுநான் கைந்தாறு ஏழெட்டு
ஒன்பது பத்துப் பதினொன்று—பன்ன
இரண்டுபதின் மூன்றுபதி னான்குபதி னைந்துபதி
னாறுபதி னேழுபதி னெட்டு."

ஒருவர், முதற்சங்கத்தின் தொகையும், இடைச்சங்கத்தின் தொகையும், கடைச்சங்கத்தின் தொகையும் ஒருவெண்பாவில் அடக்கி, அம்மூன்று சங்கத்தாருக்கும், அறுபத்துநாலு திருவிளையாடலுக்கும் "கர்த்தன் மதுரைச்சொக்கன்" என்பது பயனிலையாய் ஈற்றடியில் வரும்படி முடிக்கவேண்டுமென்ன, அவ்வண்ணமே முடித்த செய்யுள்,

"நாலாநா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலாநா னூற்றுநாற் பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான சங்கமறு பத்துநா லாடலுக்கும்
கர்த்தன் மதுரைச்சொக் கன்."

ஒருவர் "கடல்நடுவிற் சொந்த ளொழும்பினதாகப்" பாடவேண்டுமென்ன, அப்படியே கருத்தைக் கற்பித்துப் பாடியசெய்யுள்.

"சுத்தபாற்கடலி னடுவினிற்றானி தோன்றிய விதிசெய் மதுகேள், மத்தகக்கரியை யுரித்தவன்மீது மதன்பொரு தழித்திடு மாற்றம், விந்தகக்கமலை செவியுறக்கேட்டான் விழித்தனோக் தயாநதழுதோங்கிக், கைத்தலைவைத்து கார்ப்பெப்பு வைத்த வெழுந்தது கலவையின் றெந்தாள்

[illegible] திருப்பாற்கடலின் [illegible] செந்தளொழும்பிய அதிசயத்தைச் சொல்லுகிறேனென்றேன். தாருகவனத்து, முனிவர்கள் விடுத்த மஸ்தகத்தையுடைய யானையின் தோலையுரித்து ஏகாசமாகப்போர்த்த சிவனார்மேல் படையெடுத்துப் போர்செய்து மன்மதனாகிய பிள்ளை இறந்த செய்தி, அவனுடைய தாயாகிய சாதுரியமுடைய ஸ்ரீமகாலட்சுமி செவியில் வந்து புகும்படி கேட்டு, அவள் ஓவென்றிழுந்து மனமயர்ந்து அழுது மலைபோன்ற தன்னிருகைகளையும் உயர எடுத்து மார்பில் தாக்கும்படி அடித்துக்கொண்டாள். அதனால் அம்மார்பில் அப்பியிருந்த குங்குமக்கலவைச் செந்நீரானது எழுந்து பரந்ததென்பதாம். (சுத்தப்பாற்கடலென்பது—சுத்தபாற்கடலெனச் செய்யுள் விகாரமாயிற்று.)

பிறவாநெறி காட்டியார் என்னும் பெயருடையவர், "பெருங்காற்று மழைகாட்டும் பெருட்டுப் புகைகாட்டும்" என்று ஒருவெண்பாப்பாட வேண்டுமென்ன, அங்ஙனமே அவரைக்கடிந்து பாடிய செய்யுள்.

"நீரே பிறவா நெறிகாட்டி யாரெமக்கு
நீரே சமிசை நிலையிட்டீர்—நீரேயிவ்
விங்களமேன் செய்தீர் விடுங்கடுங்காற் றும்மழைகாட்
டுங்கடுகேட் புப்பகை காட்டுமே."

இ-ள், பிறவாநெறிகாட்டியாரென்று யாவராலும் சிறப்பித்துச் சொல்லப்படும் பிரபலமான பெயர்பெற்றவர் நீர்தாமோ, எமக்கு இப்படிப்பட்ட சமிசைகொடுத்த தலைப்பட்டவர் நீர்தாமோ, எதற்காக நீரிந்த விங்களம் செய்யலுற்றீர், அத்தமட்டிற்போதும் விட்டுவிடும். கடுங்காற்று மழை காட்டும் கடுகேட்புப் புகைகாட்டுமென்பதாம்.

ஒருவர், ஆமணக்குக்கும் யானைக்கும் உவமைதோன்ற ஒரு பாடல் பாடவேண்டுமென்ன, அங்ஙனமே சிலேஷித்துப்பாடிய வெண்பா.

"முத்திருக்குங் கொம்பசைக்கு மூரித்தண் டேந்திவரும்
கொத்திருக்கு மோர்க் குலைசாய்க்கும்—எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
ஆமணக்கு மால்யானை யாம்."

[illegible] இனிமையாகப் பரிமளிக்கின்ற மலர்ச்சோலைசூழ்ந்த திருமலைராயனுடைய மலையகத்தில் ஆமணக்கு முத்துடைத்தா

யிருக்கும். கோம்பைசயா நிற்கும். கெரிகின்ற தண்டேய்த்து வளரும். காய்கள் கொத்துக கொத்தாயிருக்கும். கோம்பையாகிய குலைகள் சாய்ந்திருக்கும் ஆதலாலும், யானை தனனகத்தில் முத்திருக்கும் கொம்பினை அசைக்கும், வலிபெற்ற இருபபுலககைகயைத் துதிக்கையில் ஏந்திவரும், மஸ்தகத்தில் பாகன் அங்குசத்தாற்குத்தும் புதைதுடைததாயிருக்கும், பகைவர் கூட்டததை இரிததோடடும ஆதலாலும இவ்விரணடுமே ஒன்றினையொன்று ஒக்குமென்பதாம.

ஒருவா, வைக்கோலுககும யானைககும ஒபபுமைதோனறப் பாடவேணமெனன, அவவாறே சிலேஷித்துப பாடியவெணபா.

"வாரிக்களததடிககும வந்துபினபு கோட்டைபுகும
போரிற சிறநது பொலிவாகும—சீருற்ற
செககோல மேனித திருமலைரா யனவரையில்
வைககோலு மாலயானையாம."

இ-ள. சிறபபுபபொருநதிய அழகிய சிவநத மேனியையுடைய திருமலைராயனது வெறபகததுல, வைககோல உழவாகளாற கறைக்கற்றையாக வாரியெடுததுக களததில் அடிக்கபபடும. பிறகு அங்கிருந்து கொண்டுவந்து கோடடையாகக கட்டிச சோககப்படும். அன்றியும போர்போடப்பட்டுச சிறநது பொலிநதிருககும், ஆதலாலும், யானை பகைஞர்களைவாரி யுதததகளததில அடிககும. யுததததில வெற்றி சிறந்து பொலிவுபெற்றிருக்கும். பினபு திரும்பிவநது கோடடைககுட் பிரவேசிககும் ஆதலாலும் இவ்விரண்டும ஒனறுககொன்று ஒபபாகுமென்பதாம். (செக்கோலமென்பது-செககோலமென வலிததலாயிறறு)

ஒருவா, பாமபுககும் எளளுக்கும் ஒப்பிடடுப பாடவேணடுமென்ன, சிலேஷிததுப பாடியசெய்யுள.

ஆடிக் குடததடையு மாடுமபோ தேயிரையுள்
மூடித திறக்கின முகங்காட்டும்—ஓடிமண்டை
பறறிப பரபரெனும் பாரிறபிண் ணாக்குமுண்டாம்
உறறிடுபாம் பெளளெனவே யோது.

இ-ள. பாமபு படமெடுத்தாடிக் குடததிற்குள் அடைக்கப்படும், அடும பொழுதேசீதகார பூத்காரம்பண்ணும், பெட்டிக்குள் அடைத்து மேற்புற மூடியைத் திறந்தால் தலையை நீட்டிக்காட்டும். உடனே அதன் விஷமானது மண்டையில் ஓடிப்பற்றிப் பரபரென்று ஏறும்

யுண்டாகும். அதற்குப்பிளவாகிய காக்குமிருக்கும். ஆதலாலும், என் செக்காடி அதன்சாரமாகிய தைலம் குடத்திற் சேர்க்கப்படும். செக்காடும் பொழுதோ இரைச்சலிடும். குடத்திற்பெய்து மூடிவைத்து நாளையடங்கின பின்பு திறந்துபார்த்தால், அத்தைலம் பார்த்தவர்களுடைய முகச்சாயையைத் தனக்குள்ளே காட்டும். அது உச்சியில் வார்க்கப்படுமாறுபோல் பரவியோடி மண்டையிற்பற்றிப் பாயசென வாரமெலடுக்கும். பிண்ணாக்கு முண்டாயிருக்கும் ஆதலாலும் இவ்விரண்டும் ஒன்றினையொன்று ஒக்குமென்று சொல்லுகவென்பதாம். (இதில்திலமும் அதன்தைலமும் ஒற்றுமை பற்றி அபேதமாகச் சொல்லப்பட்டன.)

ஒருவர், பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் உவமை கற்பித்துப் பாடவேண்டுமென்ன, சிலேடித்துப் பாடியசெய்யுள்

”பெரியவிடமேசேரும் பித்தர்முடி யேறும்
அரியுண்ணு முப்புமே லாடும்—எரிகுணமாம்
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பு மெலுமிச்சம் பழம்.”

இ-ள். தேனைச்சொரிகின்ற சோலைசூழ்ந்த திருமலைராயனுடைய வெற்பகத்தில், பாம்பு மிக்கவிஷம்பொருந்தி யிருக்கும். பரமசிவனுடைய திருமுடிமேலேறிக் குடைகவித்தாற்போலப் படம்விரித்திருக்கும். காற்றை உட்கொள்ளும். அதனால் உடலுப்பும். மேலெழுந்தாடாநிற்கும். கோபித்துச் சீறுகுணமுடையதாம் ஆதலாலும், எலுமிச்சம்பழம் ராஜசமுக முதலாகிய பெரிய இடங்களில் உபசாரார்த்தமாய்ப் போய்ச்சேரும். பித்தம் கொண்டவர்களுக்கு அப்பித்தம் இறங்க அவர்கள் தலையிற் சாறுபிழிந்து ஏற்றப்படும். ஊறுகாய்க்காகக் கருவியால் அரியப்படும். மேலே உப்பிடப்பட்டு ஊறுக்கப்படும். இரணத்தில் அதன் சாரம்பட்டால் எரிகின்ற குணமுடையதாம் ஆதலாலும் இவ்விரண்டும் தமக்குள் ஒன்றோடொன்று ஒப்பாகுமென்பதாம்.

ஒருவர், மலைக்கும் சந்திரனுக்கும் உபமானமாகச் சிலேடித்துப் பாடவேண்டுமென்னப் பாடியசெய்யுள்.

“மலையைப் பிளக்குதலா லீள்வான் படிந்து
நிலைபோ துலாவுதலாற் சென்று—தலைமேல
…த்து வரலா லுயர்மாமலையை
…க்குநிக ராக வழுத்து.”

இ-ள். மலை பூமியின்கண் விளங்குதலாலும், மேகங்கள் சிலகாலம் தன்னிடத்தில் வந்து படிந்து உலாவப்படுதலாலும், சொரங்களமேலே தோன்றி வருதலாலும், சந்திரன் நிலவினையுடைத்தாய்ப் பிரகாசிப்பதினாலும், கீண்டவானததின்கட் படிந்து சிலபொழுது உலாவுதலாலும், அஸ்தமித்து மறுபடி தலைமேல்உதித்து வருதலாலும் ஒன்றையொன்று ஒத்ததாகச் சொல்லாயென்பதாம்.

ஒருவர், தேங்காய்க்கும் நாய்க்கும் சமத்துவம் கற்பித்துச் சிலேஷித்துப் பாடவேண்டுமென்னப் பாடியசெய்யுள்.

"ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங் குலைதனக்கு நாணாது—சேடியே
தீங்காய தில்லாத் திருமலைரா யனவரையில்
தேங்காயு நாயுந் தெரி."

இ-ள். தீமையென்பது நாடுதலில்லாத திருமலைராயனுடைய வெற்பகத்தில, தேஙகாயானது நாரோயன்றி ஓடு முடைத்தாயிருக்கும். உடைத்துப பாரததால் அதனுட்புறம் வெளுததிருக்கும். ஒருகுலைக்குப் பத்துப்பதினைநதுகு மேறபட்டிருககுமன்றி அது தாங்குமோ தாங்காதோவென்று அஞுசிக் குறைநதிராது ஆதலாலும், நாய் சிலநேரம் இங்கும் அங்கும் ஓடித்திரியும் சிலநேரம் இருந்தவிடத்திலேயே இருக்கும். அதனுள்வாயோ வெளுததிருககும். ஆரேனும் புதியவர் வரக்கண்டால் அவரை உற்றுப்பார்க்கும. பாரததுப பின்பு குலைககு ஆரம்பிக்கும். அப்படிக் குலைப்பதில் வெட்கபபட மாட்டாது. ஆதலாலும் இவ்விரண்டுமே ஒக்குமென்று அறிவாயாகவென்பதாம. [சேடி-மகடூஉமுன்னிலை.]

ஒருவர், மீனுககும் பேனுக்கும் உவமையாகச் சிலேஷித்துப் பாடவேணடு மென்னப் பாடிய செயயுள.

"மன்னீரி லேபிறக்கு மற்றலையி லேமேயும்
பின்னீச்சிற குததுமை பெருமையால்—சொன்னேன் கேள்
தேனுநதுசோலைத் திருமலைரா யன்வரையில்
மீனுமபே னுஞ்சரியா மே."

இ-ள். மீன் பெருமைதங்கிய நீரிடத்தில் உற்பத்தியாகும். உற்பத்தியானபின்பு அந்நீர்த்திரையிலேயே மேய்ந்துக்கொண்டிருக்கும். அப்படி

விடத்திற் சலாகையைக் கொண்டிருப்பதனாலும், சுடுவோன்குறித்த குறி தவறாததினாலும், குறையாமல் கறுத்த மருந்திடப் படுதலாலும், ஓலைச்சுருள் எழுத்தாணிகொண்டு எழுதப்படுதலாலும், தன்கணெழுதிய விஷயக்குறிப்பைப் பிறருக்குத் தெரிவித்தலாலும், மைபூசப்படுதலாலும் இவ்விரண்டும் சமானமாகுமென்பதாம். (தோன்றவென்பது - தோணவெனமருவியது.)

ஒருவர், வானவில்லுக்கும், விஷ்ணுவுக்கும், வெற்றிலைக்கும், முப்பொருட் சிலேடையாக ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்.

"நீரி லுளதா னிறம்பச்சை யாற்றிருவால
பரிசிற் பகைதீர்க்கும் பான்மையால்—சாருமனுப்
பல்வினையை மாற்றுதலாற் பாரீர் பெருவான
வில்விணடு நேர் வெற் றிலை."

இ-ள். வானவில் நீர்கொண்ட மேகத்தில் தோன்றியிருப்பதினாலும், பச்சைநிறம் உண்டாதலாலும், அழகுடைத்தாதலாலும், மழைக்குறிகளிலொன்றாய்ப் பூமியிற் கோடையென்னும் பகையைத் தீர்ப்பதினாலும், மனிதர்களுடைய பலவகைப்பட்ட தொழில்களையும் மாற்றுதலினாலும், விஷ்ணு மகாபிரளயத்தின் மத்தியில் தங்குவதனாலும், சாமளவர்ணமாயிருப்பதனாலும், இலக்குமியை யுடையதனாலும், உலகத்தில் தேவர்கள் முனிவர்களுடைய பகையை ஒழிக்கும் பான்மையினாலும், தன்னை ஆசிரயித்த மனுக்களின் சஞ்சித, ஆகாமிய, பிராரப்த கருமங்களை நிவாரத்திப்பதனாலும், வெற்றிலை நீர்க்கால்களி லிருப்பதனாலும், பச்சென்ற நிறமுடையதனாலும், மங்களகரமாதலாலும், ஒருவரையொருவர் பகைத்திருந்தால் அப்பகையை நிவர்த்திக்கின்ற தன்மையினாலும், மக்களது தந்த ரோகத்தைத் தீர்ப்பதனாலும், இம்மூன்றும் ஒப்புமையுடையன வென்பதாம்.

ஒருவர், பூசணிக்காய்க்கும், ஈசனுக்கும் ஒப்புமைத்துப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்.

"அடிசுற்றி சேர்தலா லாகம் வெளுத்துக்
கொடியு மொருபக்கங் கொண்டு—வடிவுடைய
மாதுளைக்குளை பூண்டு வளைத்தழும்பு பெற்றதனால்
[illegible] யோற்று"

இ-ள். பூசனிக்காய் அடியிற் காம்பு சேர்ந்திருப்பதினாலும், உடல் வெளுத்து ஒருபக்கத்திற் கொடியையுங்கொண்டு, அழகினையுடைய வெண்கண்ணத்தை மேற்புறத்திற் பூண்டு, வளைவாகிய தழும்புபெற்றிருப்பதனாலும், ஈசன் அடியில் ரிஷபம் சேர்ந்திருப்பதனாலும், விபூதி தூளனத்தால் திருமேனி வெளுத்து, பார்வதியையும் ஒருபக்கத்தில் வைத்துக்கொண்டு, அழகுடைய சர்ப்பாபரணத்தைப் பூண்டு, உமையவளுடைய வளைத்தழும்பு பெற்றிருப்பதனாலும் ஒப்பென்று சொல்லுகவென்பதாம்.

ஒருவர், ஐந்து-டுகரம் வரக் கும்பேசர் விஷயமாகப் பாடவேண்டுமென, நிரனிறையணியாகப் பாடிய செய்யுள்.

"ஓகாமா வீதோ டுடுடுடுடு நேரொக்க
காகா குடந்தை நகர்க்கிறைவா—வாகாய
எடுப்பர் நடம்புரிவ ரேறுவ ரன்பர்க்குக்
கொடுப்ப ரணிவர் குழைக்கு."

இ-ள். இளமரங்கள் அடர்ந்த சோலைசூழ்ந்த திருக்குடந்தை இறைவராகிய கும்பேசர், ஓ, கா, மா, வீ, தோ என்னும் இவ்வைந்தெழுத்துடனே, டு, டு, டு, டு, டு, என்னும் இவ்வைந்தெழுத்தும் தனித்தனி பொருந்த அவை ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்றாதலால், அவற்றுள் முறையே ஒன்றை அழகாகக் கையில் எடுப்பர். ஒன்றில் நடனஞ்செய்வர். ஒன்றின்மேல் ஏறுவர். ஒன்றைத் தம்மன்பர்க்குக் கொடுப்பர். ஒன்றைச் செவியில் அணிவரென்பதாம். (தோடு-காதாபரணம்)

ஒருவர், பச்சைவடம், பாகு, சேலை, சோமன் என்னும் இந்நான்கு வஸ்திரபேதமும் வரும்படி ஒரு வெண்பாப்பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்.

"மாயன் றுயின்றதுவு மாமலரான் சொல்லதுவும்
ஏய்குருந்திற்கொண் டேறியதும்—தூய
இடப்பாகன் சென்னியின்மே லேறியதும் பச்சை
வடம்பாகு சேலைசோ மன்."

இ-ள். நெடுமால் மகாபிரளயத்தில் திருக்கண் வளர்ந்தருளியதும் (பச்சைவடம்), தாமரையாசனத்தையுடைய இலக்குமியின் சொல்லும் (பாகு), கண்ணபிரான் கோபிகைகளை நாணச்செய்யும்பொருட்டுக் கவர்ந்துகொண்டுபோய்க் குருந்தமரத்திலேறி ஒளித்துவைத்த திருந்தமும் (சேலை), மலை

மங்கை இடப்பாகத்திலுடைய சிவபெருமானது திருமுடியில் ஏறியிருப்பதும் (சோமன்) முறையே பச்சைவடம் பாகு சேலை சோமன் என்பதாம் [பச்சைவடம்-ஆலிலை, சோமன்-சந்திரன்]

ஒருவர், பொன்னுவரையிலை காய்பூவென்று பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்.

"உடுத்ததுவு மெய்த்ததுவு மும்பாகோன் றன்னால
எடுத்ததுவும் பள்ளிக் கிசையப—படுத்ததுவும்
அங்கா ளெறிந்ததுவு மன்பி னிரந்ததுவும்
பொன்னு வரையிலைகாய் பூ."

இ-ள். ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் ஆடையாக உடுத்ததும் (பொன்), கிருஷ்ணவதாரத்தில் மேய்த்ததும் (ஆ), இந்திரன் கல்மழை பொழிவித்ததினிமித்தம் குடையாக எடுத்ததும் (வரை), சயனத்துக் கிசையப்படுத்ததும் (இலை), அக்காலத்திற் கன்றுகொண் டெறிந்ததும் (காய்), அன்பினால் பலிச்சக்கரவர்த்தியிடத்தில் இரந்ததும் (பூ) முறையே பொன்னுவரையிலை காய்பூ வென்பதாம் [வரை-மலை, பூ-பூமி]

கச்சிக்காவல னென்னும் ஒருவர், செங்கழுநீர்க் கிழங்கென்று பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்,

"வாதமணர் ரேறியது மாயன் றுயின்றதுவும்
ஆதித்தடித் தாடகொண்ட வவ்வுருவும்—சீதரனார்
தாள்கொண் டளந்ததுவுந் தண்கச்சிக் காவலா
கேள்செங் கழுநீர்க் கிழங்கு."

இ-ள். சாந்தகுணத்தை யுடைய கச்சிக்காவலனே கேட்கக்கடவாய் சம்பந்தமூர்த்திகளுடனே வாதுசெய்த சமணர்களேறியதும் (செங்கழு), நாராயணன் பள்ளிகொண்டதும் (நீர்), பரமசிவன் சுந்தரமூர்த்திகளைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு எடுத்த உருவும் (கிழம்), விஷ்ணுவானவர் திருவடியால் அளந்ததும் (கு) முறையே செங்கழுநீர்க் கிழங்கென்பதாம் [கு-பூமி.]

ஒருவர் கா, நீ, நா, கென்று பாடவேண்டுமெனப் பாடியசெய்யுள்.

"அரையின் முடியி லணிமாரபி னெஞ்சில
தெரிவை யிடத்தமர்ந்தான் சேவை—புரையறவே

மானுர்விழியீர் மலரணைவொற்றீருகும
ஆனுலாம் நாநீநூரே."

இ-ள். ம், ல், ர், ண எனனும இநநான்கு ஒற்றும், கா, நீ, நூ, கே என்னும இநநான்கிறகும தலைதடுமாறறமாய் இறுதியாக, காண், நீர், நூல், கேம் எனவருமாயின, உமாதேவி யிடபபாகததி லெழுந்தருளிய சிவபிரானது, அரையிலும, முடியிலும, மாாபிலும, கழுததிலும முறையே சேர்க்கப்படுவனவாகும எனபதாம. [கேம-விஷம் மானா விழியீா என்பது மகடூஉ முனனிலை]

ஒருவா, கணபதிககும, முருகனுககும, சிவனுக்கும சிலேடையாக ஒரு வெணபாப பாடவேணடுமெனப பாடிய செயயுள.

"செனனிமுக மாறுளதாற சோதருமுன் னுலுகையால
இநநிலததிற கோடொன றிருக்கையால—மனனுகுளக்
கணணுறுத லாலுங கணபதியுஞ செவ்வேளும
எணணரனு நேராவ ரோ."

இ-ள். விநாயகன முகமாறுபட்டிருப்பதனாலும, முன்னே தொங்குகினற துதிக்கையினாலும, ஒரு கொம்பினை யுடைததா யிருப்பதனாலும, வெலலததின்கண ஆவிர்பபவிததலினாலும, முருகன் ஆறுமுகததுடனிருப்பதனாலும, நெருங்கிய பன்னிரண்டு கைகளினாலும, இநதப்பூமியில் ஒப்பற்ற திருச்செங்கோட்டி லிருப்பதனாலும, நிலைபெற்ற சரவணப் பொய்கையில் அவதரித்தலினாலும, சிவன் திருமுடியிற கங்கையிருப்பதனாலும், முன்னே சோதிருக்கினற நான்கு கைகளினாலும், இவ்வுலகத்திற கைலைமலையி லிருப்பதனாலும், நெறறிக்கணணைப பொருநதுதலாலும இம்மூவரும தம்முள ஒருவரை ஒருவா ஒப்பாவாரெனபதாம. (சென்னிமுகமென்பது-இருபெயரொட்டு)

ஒருவா, தை மாசி பங்குனி மாதம் எனறு பாடவேண்டு மெனப்பாடிய செய்யுள.

"பாணற்கூச சொல்லுவதும் பைமபுனலை மூடுவதும்
தானுவுரிந்த ததுவுஞ சககரத்தோன்—வேணதுவும்
எமமானை யெய்துவது மீசனிடத் தஞ்சிரத்தும்
தைமமாசி பங்குனி மாதம."

இ-ள். தைப்பற்காரனுக்குச் செய்யென்று சொல்வதும் (தை), சலத்தை மறைத்துக்கொண்டிருப்பதும் (மாசு), சிவன்அடர்த்து உரித்ததும் (இபம்) விஷ்ணுவுக்கு உணவாயிருப்பதும் (கு) எங்கள் பெண்ணைச்சேர்வதும் (நீ), பரமசிவன் இடப்பாகத்தில் வைத்ததும் (மாது), முடியில் தரித்ததும் (அம்) முறையே தை மாசி பங்குனி மாதம் என்பதாம். [இபம்-யானை, அம்-கங்கை,] நீ என்பது-நி எனக்குறுக்கலாயிற்று.

ஒருவர், ஒருபாடல் செருப்பென்றெடுத்து விளக்குமாறென்று முடிக்க வேண்டுமென்ன பாடியசெய்யுள்.

"செருப்புக்கு வீரர்களைச் சென்றுழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல—மருப்புக்குத்
தண்டேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே."

இ-ள். யுத்தகளத்திற் போய்ப்புகுந்து வீரர் கூட்டத்தைக் கலக்கிச் சிந்தடிக்கின்ற வேலாயுதத்தை யேந்திய குறிஞ்சித்தலைவனாகிய முருகக்கடவுளை யான் ஆலிங்கனஞ்செய்ய, வாசனைபொருந்திக் குளிர்ச்சி தங்கிய தேனைச் சொரிகின்ற அழகிய தாமரைமலரின்மேல் வீற்றிருக்கின்ற வண்டுதானே வழிகாட்டாநிற்கு மென்பதாம். இக்கருத்து ஒருபெண் முருகவேளைத் தழுவக் கருதி வண்டைத் தூதுவிடக்குறித்ததாக அமைக்கப்பட்டது.

ஒருவர், பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சமானம் தோன்றப்பாட வேண்டுமென்ன பாடிய செய்யுள்.

"நஞ்சிருக்குந் தோலுரிக்கு நாதர்முடிமேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாதே—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்."

இ-ள் மிகுதியாகப் பூந்தேன் பாய்கின்ற சோலைசூழ்ந்த திருமலைராயனுடைய வெற்பகத்தில், பாம்பு விஷமுடைத்தாயிருக்கும் காயசித்திபெற்றோர் சட்டை கழற்றுவதுபோலப் பருவமறிந்து தோலுரிக்கும். கடவுள் முடியின்மேலிருக்கும். கொடிய கோபத்தினாலே அதன் பற்பட்டால் இறந்தவுயிர் திரும்பமாட்டாது ஆதலாலும், வாழைப்பழம் நைந்திருக்கும். தோலுரிக்கப்படும். கடவுள் திருமுடிமேல் பஞ்சாமிர்தத்தோடு கூட்டி அபிஷேகிக்கப்படும். சரியாகவாவது மற்றெவ்வகையாகவாவது புசிப்பவர்களுடைய பல்லினிடத்திற்பட்டாற் பின்பு திரும்பமாட்டாது ஆதலாலும் இவ்விரண்டும் ஒப்பாமென்பதாம்.

ஒருவர், கண்ணாடிக்கும் அரசனுக்கும் ஒப்புமைத்தாப் பாடவேண்டுமென்னப்பாடிய செய்யுள்.

'யாவருக்கு மஞ்சனைசெய் தியாவருக்கு மவ்வுருவாய்ப்
பாவனையாய்த் தீதகலப் பார்த்தலால்—மேவும்
எதிரியைத் தன்னு ளாக்கிப் பெற்ற ரசத்தால்
சதிருறலா லாடி யரசாம்.''

இ-ள். கண்ணாடி எல்லார்க்கும் விருப்பத்தை யுண்டாக்கி, எல்லார்க்கும் அவரவரைப்போலப் பாவனையாய் முகத்தழுக்கு நீக்கத் திருத்தமிக்கப் பார்க்கப் படுதலாலும், எதிர்ப்பட்டவற்று சாயையைத் தனக்குள்ளே கொள்ளத்தக்கதாக ரசம் பூசப்பட்டுச் சதிபெற் றிருப்பதனாலும், அரசன் தன் கோலின்கீழ் வாழ்வார் யாவருக்கும் சந்தோஷமாகிய செய்கையைச் செய்து, யாவருக்கும் அவரவர் நிலைமைக்கேற்கத் தன்னைப் பாவித்துத் தீமையகலப் பார்ப்பதனாலும், தன்மேற் போருக்கு வருகின்ற பகைஞனைச் சாமோபாயத்தால் தன் வசப்படுத்திச் சிங்கார முதலிய நவரசத்தைக் கொண்டு மகிமை பெற்றிருப்பதனாலும் ஒப்பாமென்பதாம்.

ஒருவர், சிவனைக்குறித்து நீறுவாய் நெருப்பாவாய் கூறுவாய் கொளுந்துவாய் நட்டமாவாய் நஞ்சாவாய் என்று ஒரு வெண்பாப் பாடவேண்டுமென்னப் பாடிய செய்யுள்.

''நீறுவாய் நெற்றி நெருப்பாவா யங்கமிரு
கூறுவாய் மேனி கொளுந்துவாய்—மாறாத
நட்டமா வாய்சோறு நஞ்சாவாய் நாயேனை
இட்டமாய்க் காப்பா யினி.''

இ-ள். நெற்றியின்கண் திருநீறுடைத்தா யிருப்பாய். அங்கம் அக்கினி மயமா யிருப்பாய். திருமேனி இரண்டு கூறாயிருப்பாய். அன்றியும் எரிந்து கொண்டிருப்பாய். எக்காலமு மொழியாத திருநடனமுடைத்தா யிருப்பாய். நஞ்சை உணவாகக் கொள்ளுவாய். உனது ஞானாதிசயம் பகிர் முகத்தில் இப்படியிருப்பினும் அந்தர்முகத்திலுள்ள கிருபையினால் நாய்போன்ற அடியேனை இஷ்டமாக ரக்ஷித்தல் வேண்டும் என்பதாம்.

ஒருவர், அடிப்பது மத்தாலேயாம் என்பதை ஈற்றடி யாகக்கொண்டு அயலடியும் அதுபோலத் திரித்து ஒருவெண்பாப் பாடவேண்டுமெனப் பாடிய செய்யுள்.

"வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியெனறும்
கண்ண னிவனென்றுங் கருதாமல்—மண்ணை
அடிப்பது மத்தாலே யளந்தானை யாய்ச்சி
அடிப்பதுமத் தாலே யழ."

இ-ள். உலகமுழுவதும் திருவடித தாமரையினலளநத பரமவிராடடு வை இவன் காரபோலுங கரியநிறததை யுடையவனெனறும், சகலவேதங களும் பரிமளிக்கின்ற திருவாயினை யுடையவ னெனறும, யாவாகளுணணி னிடததிலு மிருபபவனென்றும நினையாமல் அசோதைப பிராட்டியானவள மததினலேயா அழும்படி அடிக்கிறது? அவனை முகவுல்லாசமாமபடி. பூவும புனலும் பெய்து பூசிக்கவேணடு மல்லவோ? என்பதாம.

ஒருவர், திருமலைராயனுடைய வாளைக குறிததுப பாடவேணடுமெனப பாடியசெய்யுள.

"செற்றலரை வென்ற திருமலைரா யன்கரததில
வெறறிபுரி யுமவாளே வீரவாள—மறறையவாள
போவாள வருவாள புகுவாள புறபபடுவாள
ஆவாளி வாளவா ளாம"

என்பதாம். இது பொருளவிளஙகிக கிடககின்றது.

ஒருவா, சிவனுககும, சுபபிரமணியனுககும, விநாயகனுககும, விஷ ணுவுககும், சிவனடியாருககும தனிததனி ஆறுதலையுணடென்று ஒரு வெண்பாப பாடவேணடுமெனப பாடிய செயயுள

"சஙகரற்கு மாறுதலை சணமுகறகு மாறுதலை
ஙகரற்கு மாறுதலை யானைவே—சஙகைப
பிடித்தோற்கு மாறுதலை பித்தனா பாதம
படித்தோறகு மாறுதலை பார."

இ-ள். பரமசிவனுககுத் திருமுடியிற கஙகையும, சுபபிரமணியனுககு ஆறுசிரசும், விநாயகனுககு மாறுசிரசும, விஷ்ணுவுககுப பிரளயமாகிய உ ததிவிடமும், சிவனுடைய திருவடியைத் துதிசெய்பவாகளுககு மனவருத தந தணிதலுமுணடென்று நீ காண்பாயாக என்பதாம.

ஒருவர், சிவனை முக்கண்ண னென்பதற்கு வேறு காரணந் தோனற ஒரு வெண்பாப் பாடவேண்டுமெனப் பாடியசெய்யுள.

"முக்கண னென்றரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே—தொக்க
உமையாள்கண் ணொன்றரைமற் றூன்வேடன் கண்ணொன்
றமையுமித னாலென் றறி."

இ-ள். சான்றோர் சிவபிரானை மூன்றுகண்ணுடையோனென்று பிரசித்தமாகச் சொல்வார்கள். அப்படிச்சொல்வது யாதினாலெனில், அச்சிவனுக்கு இயற்கையா யுள்ளது அரைக்கண்மாத்திரமே. அதனோடு வாமபாகத்தில் அர்த்தநாரியாய் எழுந்தருளிய உமாதேவியின் கண்ணொன்றரையும் அக்காலத்தில் ஊனப்படைத்த கண்ணப்பநாயனாரென்னும் வேடன் தன்முகத்தில் நின்றும் கீண்டு சாத்தியகண்ணொன்றும் சேர்ந்து மூன்றாயிருக்கின்ற இவ்விதக்காரணத்தினாலேதானென்று அறிகவென்பதாம்.

ஒருவர், கஞ்சிகுடியென்று சிலேடையாக ஏகாம்பரநாதர்மேல் ஒரு வெண்பாப்பாடவேண்டு மென அதற்கு மேலும் விசேஷமாகப் பாடுவோ மென்று பாடிய செய்யுள்.

"சேயிழாய் வந்தொருவன் சித்திரையிற் கைபிடித்தான்
வேறாரா னென்றுவிடாயென்றேன்—ஆற்றியே
கஞ்சி குடியென்றான் களித்தின்று போவென்றேன்
வஞ்சியமீர் சென்றான் மறைந்து."

இ-ள். கொடிபோலும் இடையினையுடைய சேடிகளே! நேற்றிராத்திரி நித்திரைசெய்யுஞ் சமயத்தில் ஒருவன் வந்து என் கையைப் பிடித்தான். நான் அவன் யாரோ அயலாரானென்று ஐயமுற்றுப் பிடித்தகையை விடென்பதற்கு விடாயென்றேன். அவனென்னைத் தணியச்செய்து அதற்கு உத்தரமாக நீ விடாய் கொண்டிருப்பதனால் அது தணியக் கஞ்சிகுடியென் பதுபோலக் கஞ்சிகுடி யென்றான். என்றவுடன் காஞ்சிப்பதியில் வசிக்கும் ஏகாம்பரநாத னென்று நான் தெளிந்து இப்பொழுது என்னைச்சேர்ந்து சுகித்துப்போ வென்பது குறிப்பாகத் தோன்றும்படிக் களித்தின்றுபோ வென்றேன். அதுகேட்டு அவன் தான் கஞ்சி குடியென்றதற்குப் பரிகாசமாகத் தன்னை நான் குளித்தின்றுபோவென்று சொன்னேனென்றோ, அல்லது மற்றியாது காரணத்தினாலோ உடனே மாயமாய் மறைந்துபோய் விட்டான். இதென்ன ஆச்சரியம் என்பதாம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible], ஒருபடி [illegible] கேட்டு [illegible]

"ஆசுகவி மாரி யகில வுலகமெல்லாம்
வீசு கவிகாள மேகமே—பூசுரா
விண்கொண்ட செந்தழலாய் வேகின்றதேயையோ
மண்டின்ற பாணமென்ற வாய்."

என ஒருவெண்பாப்பாடி விசனப்பட்டார். இந்தப்பாட்டும், கா ளென்றுஞ்சிருக்கு நற்சாபம் நற்சாபமென்றதும இரட்டைப்புலவர்க ளால் பாடப்பட்டனவென்று சிலர் சொல்லுவார்கள். அப்படிச்சொல்வது யுக்திக்கும் அனுபவத்திற்கும் விரோதமாயிருக்கின்றது.

காளமேகப்புலவர் சரித்திரம் முற்றிற்று.